# நடப்பு நிகழ்வுகள் - அக்டோபர் 2020

## அட்டவணை


| தலைப்புகள் | பக்கம் |
|---|---|
| முக்கிய தினங்கள் | 3 |
| தமிழ்நாடு | 5 |
| மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் | 9 |
| தேசிய நிகழ்வுகள் | 11 |
| இந்தியா மற்றும் இதர நாடுகள் | 20 |
| சர்வதேச நிகழ்வுகள் | 22 |
| நியமனங்கள் | 24 |
| திட்டங்கள் | 25 |
| குழுக்கள் | 27 |
| அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுற்றுச் சூழல் | 28 |
| மாநாடுகள் மற்றும் உச்சி மாநாடுகள் | 32 |
| பாதுகாப்பு | 36 |
| மசோதாக்கள் மற்றும் சட்டங்கள் | 41 |
| பொருளாதாரம் | 44 |
| விளையாட்டுகள் | 45 |
| விருதுகள் | 47 |
| புத்தகங்களும் ஆசிரியர்களும் | 49 |
| இரங்கல் செய்திகள் | 49 |
| செயலிகளும் இணையதளங்களும் | 50 |
| அட்டவணை, தரவரிசை மற்றும் அறிக்கை | 50 |

APPOLO STUDY CENTRE

# முக்கிய தினங்கள்

| தேதி | தினங்கள் | மையக்கருத்து |
|---|---|---|
| அக்டோபர்-1 | பன்னாட்டு முதியோர் தினம் | "செவிலியர் மற்றும் பேறுகால உதவியாளர்கள் ஆண்டு". |
| அக்டோபர்-2 | பன்னாட்டு அகிம்சை தினம் | "ஒன்றுசேர்ந்து அமைதியை உருவாக்குதல்". |
| அக்டோபர்-2 | உலக பண்ணைப்படுத்தப்பட்ட விலங்குகள் தினம் | |
| அக்டோபர்-4 | உலக விலங்குகள் தினம் | "புவியில் அனைத்து உயிர்களையும் பராமரித்தல்" |
| அக்டோபர்-4-10 | உலக வானியல் வாரம் கொண்டாடப்பட்டது | "செயற்கைக்கோள்கள் வாழ்வை மேம்படுத்தும்" |
| அக்டோபர்-2-8 | வனவிலங்கு வாரம் | "மனித – விலங்கு உறவுகளை கண்டறிதல்" |
| அக்டோபர்-5 | உலக ஆசிரியர்கள் தினம் | "ஆசிரியர்கள்: சிக்கலில் வழிகாட்டுபவர்கள், எதிர்காலத்திற்கு மறுவடிவம் கொடுப்பவர்கள்" |
| அக்டோபர்-5 | உலக வாழ்விட தினம் | "அனைவருக்கும் இல்லம் - ஒரு சிறந்த நகர்ப்புற எதிர்காலம்" |
| அக்டோபர்-5 | கங்கை ஆற்று டால்பின் தினம் | |
| அக்டோபர்-7 | உலக பருத்தி தினம் | "என்னை இயக்கும் நார்ப்பொருள்" |
| அக்டோபர்-8 | உலக கண்பார்வை தினம் | "கண்பார்வையில் நம்பிக்கைக் கொள்" |
| அக்டோபர்-9 | உலக அஞ்சல் தினம் | "நாம் எப்போதும் வழங்குகிறோம்" |
| அக்டோபர்-9 | உலக முட்டை தினம் | "இன்றும் மற்றும் ஒவ்வொரு நாளும் முட்டை உண்க". |
| அக்டோபர்-10 | வங்கி தினம் | |
| அக்டோபர்-10 | உலக மனநல தினம் | "அனைவருக்கும் மனநலம்" |
| அக்டோபர்-10 | உலக இடம்பெயரும் பறவை தினம் | "பறவைகள் நம் உலகை இணைக்கின்றன" |
| அக்டோபர்-11 | பன்னாட்டு பெண் குழந்தைகள் தினம் | "குழந்தைத் திருமணத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தல்" |
| அக்டோபர்-11 | உலக உடல்பருமன் தினம் | "உடல்பருமனின் வேர்கள் ஆழமானது" |
| அக்டோபர்-12 | உலக கீல்வாதம் தினம் | "செயல்பாடு உன் கையில் உள்ளது" |
| அக்டோபர்-13 | பேரிடர் அபாயக் குறைப்பிற்கான பன்னாட்டு தினம் | "அனைத்தும் ஆளுகையைப் பற்றியதே" |
| அக்டோபர்-14 | உலகத் தரங்கள் தினம் | "கோள்களை தரங்களுடன் பாதுகாத்தல்" |
| அக்டோபர்-14 | பன்னாட்டு மின்னணுக்கழிவு தினம் | |
| அக்டோபர்-15 | உலக மாணவர்கள் தினம் | "மக்கள், செழுமை மற்றும் அமைதிக்கான கற்றல்" |
| அக்டோபர்-15 | பன்னாட்டு கிராமிய பெண்கள் தினம் | "COVID-19 எதிரான கிராமிய பெண்களின் எதிர்ப்புசக்தியை உருவாக்குதல்" |
| அக்டோபர்-15 | உலக கை கழுவும் தினம் | "அனைவருக்குமான கை சுத்தம்" |

| | | |
|---|---|---|
| அக்டோபர்-15 | ராஷ்ட்ரிய மகிளா கிசான் திவாஸ் | |
| அக்டோபர்-16 | உலக உணவு தினம் | "வளர், ஊட்டமளி, மற்றும் நிலைநிறுத்து போன்றவற்றை ஒன்றிணைத்திடுக" |
| அக்டோபர்-17 | உலக வறுமை நாள் | "அனைவருக்குமான சமூக மற்றும் சுற்றுச்சூழல் நீதியை சாதிப்பதற்கு ஒன்றினைந்து செயல்படுதல்" |
| அக்டோபர்-17 | உலக அதிர்ச்சி தினம் | |
| அக்டோபர்-18 | மரண தண்டனைக்கு எதிரான உலக தினம் | |
| அக்டோபர்-20 | பன்னாட்டு சமையல் கலைஞர் தினம் | "எதிர்காலத்திற்கான சுகாதார உணவு" |
| அக்டோபர்-20 | எலும்புப்புரை நோய் தினம் | "அது எலும்புப்புரை நோயாகும்" |
| அக்டோபர்-20 | உலக புள்ளியல் தினம் | "நாம் நம்புகின்ற தகவல்களுடன் உலகத்தை இணைத்திடுதல்" |
| அக்டோபர்-21 | காவலா் வீரவணக்க நாள் | |
| அக்டோபர்-21 | உலக அயோடின் குறைபாட்டு செயல்பாடுகளை தடுக்கும் தினம் | |
| அக்டோபர்-22 | பன்னாட்டு திக்குதிணறல் விழிப்புணர்வு தினம் | "வார்த்தைகளின் பயணம் - எதிர்ப்புத்திறன் மற்றும் குதித்தல்" |
| அக்டோபர்-23 | பன்னாட்டு பனிச்சிறுத்தை தினம் | |
| அக்டோபர்-24-30 | படைபலக்குறைப்பு வாரம் | |
| அக்டோபர்-24 | உலகப் போலியோ தினம்,<br><br>UNO நாள் | "போலியோவுக்கு எதிரான வெற்றி என்பது உலக சுகாதாரத்திற்கான வெற்றியாகும்" |
| அக்டோபர்-27 | கேட்பொலிக்காட்சி பாரம்பரியத்திற்கான உலக தினம் | "உலகிற்கு உனது ஜன்னல்" |
| அக்டோபர்-27 | 74-வது காலாட்படை தினம் | |
| அக்டோபர்-27 – நவம்பர்-2 | லஞ்சஒழிப்பு விழிப்புணர்வு தினம் | "சதாரக் பாரத், சாம்ரிக் பாரத் (விழிப்பான இந்தியா, செழுமை இந்தியா) |
| அக்டோபர்-28 | 19-வது பன்னாட்டு இயங்குபடத் தினம் | |
| அக்டோபர்-29 | பன்னாட்டு இணைதள தினம் | |
| அக்டோபர்-29 | உலக பக்கவாத தினம் | "இயக்கத்தில் இணைவதற்கு தயாராகுக" |
| அக்டோபர்-31 | உலக நகரங்கள் தினம் | "நமது சமூகங்களையும், நகரங்களையும் மதித்திடுக" |
| அக்டோபர்-31 | உலக சிக்கன தினம் | |
| அக்டோபர் 31 | தேசிய ஒற்றுமை நாள் | |

# தமிழ்நாடு

❖ **புதிய சட்டசபைத் தொகுதிகள்:**

- புதிய சட்டசபைத் தொகுதிகள், இரண்டாக மற்றும் மூன்றாக பிரிக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம், வேலூர், விழுப்புரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள புதிய சட்டசபைத் தொகுதிகளை தேர்தல் ஆணையர் அறிவித்துள்ளார்.
- அதற்கிணங்க, சோழிங்கநல்லூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர், செய்யூர் (SC) மற்றும் மதுராந்தகம் (SC) ஆகிய 7-தொகுதிகளை செங்கல்பட்டு மாவட்டம் பெற்றிருக்கும்.
- இருப்பினும், ஆலந்தூர், ஸ்ரீபெரும்புதூர் (SC), உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய தொகுதிகள் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள சட்டசபைத் தொகுதிகளாக தொடரும்.
- காட்பாடி, வேலூர், அணைக்கட்டு, கீழ்வைத்தியனாக்குப்பம் (SC) மற்றும் குடியாத்தம் (SC) ஆகிய தொகுதிகளை மூன்றாகப் பிரிக்கப்பட்டுள்ள வேலூர் மாவட்டம் பெற்றிருக்கும்.
- அரக்கோணம் (SC), சோழிங்கர், ராணிப்பேட்டை மற்றும் ஆற்காடு ஆகிய தொகுதிகளை புதிதாக அமைக்கப்பட்டுள்ள ராணிப்பேட்டை மாவட்டம் பெற்றிருக்கும்.
- மேலும், வாணியம்பாடி, ஆம்பூர், ஜோலார்பேட்டை மற்றும் திருப்பத்தூர் தொகுதிகளை புதிதாக உருவான திருப்பத்தூர் மாவட்டம் பெற்றிருக்கும்.
- நாகப்பட்டினம் மாவட்டத்திலிருந்து மயிலாடுதுறை மாவட்டம் பிரிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதற்கு சிறப்பு அலுவலர் ஒதுக்கப்படாததால் எவ்வித செயல்பாடும் ஒதுக்கப்படவில்லை.
- உளுந்தூர்பேட்டை, ரிஷிவந்தியம், சங்கராபுரம் மற்றும் கள்ளக்குறிச்சி (SC) ஆகிய தொகுதிகளை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளக்குறிச்சி மாவட்டம் பெற்றுள்ளது.
- மேலும், திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குனேரி மற்றும் ராதாபுரம் ஆகிய தொகுதிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளடங்குகின்றன.
- சங்கரன்கோயில் (SC), வாசுதேவநல்லூர் (SC), கடையநல்லூர், தென்காசி மற்றும் ஆலங்குளம் ஆகிய தொகுதிகள் புதிதாக உருவாக்கப்பட்டுள் தென்காசி மாவட்டத்தில் உள்ளடங்குகின்றன.

❖ **'ஒரு தேசம், ஒரு குடும்ப அட்டை'**

- தமிழ்நாடு அரசாங்கம், அக்டோபர்-1லிருந்து மத்திய அரசின் இத்திட்டத்தைத் தொடங்கவுள்ளது.
- இத்திட்டம் ஆரம்பத்தில் 32-மாவட்டங்களில் அமல்படுத்தப்படும். மேலும், மதுரை, இராமநாதபுரம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய 6-மாவட்டங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும்.
- 2-கோடிக்கு மேல் குடும்ப அட்டைகளைப் பெற்றுள்ள தமிழக மக்கள் 2013ஆம் ஆண்டின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பொதுவிநியோகம் மூலமாக உரிய உணவு தானியங்களை பெறுவார்கள்.
- ஏற்கெனவே 25-க்கும் மேற்பட்ட மாநிலங்கள் இத்திட்டத்தில் இணைந்துள்ளன. இத்திட்டம், எந்த மாநிலத்தைச் சேர்ந்தோர் என்று பாராமல் இடம்பெயரும் குடும்பங்களுக்கான பொதுவிநியோகம் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அனைத்து பொதுவிநியோகக் கடைகளிலும் அந்தந்த இட விற்பனை ஊர்திகள் மற்றும் கருவிகளைப் பெற்று பயனாளிகளுக்குரிய மாதாந்திரப் பொருட்களை வழங்கும்.

❖ **திடக்கழிவு மேலாண்மை**

➢ இவ்விதத் திடக்கழிவு மேலாண்மை ஸ்பெயினை சேர்ந்த தனியார் நிறுவனமான **Urbaser-Sumeet-**ஆல் மேற்கொள்ளப்படுகிறது.

➢ தெருக்களை சுத்தம் செய்தல், இல்லங்களிலிருந்து கழிவுகளைச் சேகரித்தல், திடக்கழிவுகளைப் பிரித்தல் மற்றும் கழிவுகளை ஓரிடத்தில் கொண்டு சேர்த்தல் பொன்றவற்றை இந்த மேலாண்மை மேற்கொள்ளம்.

➢ இந்த நிறுவனம், 7-மாநகர மண்டலங்களை மேலாண்மை செய்யும் மற்றும் 100% பணிகளை மேற்கொள்ளும்.

❖ **சிறந்த மாவட்டம் - திருநெல்வேலி**

➢ 'தூய்மை இந்தியா' திட்டத்தின் கீழ் அரசாங்க உதவியுடன் தனிநபர் வீடுகளுக்கான கழிவறைகள் மற்றும் ஒருங்கிணைந்த கழிவறைகள் போன்றவற்றை கட்டுவது தொடர்பான அரசாங்கத் திட்டத்தை அமல்படுத்துவது ரீதியாக நாட்டிலுள்ள சிறந்த மாவட்டமாக திருநெல்வேலி மாவட்டத்தை மத்திய அரசு தேர்வு செய்துள்ளது.

❖ **நானோ செயற்கைக்கோள்**

➢ தேசிய வான்பயணவியல் மற்றும் வானியல் நிர்வாகம் (NASA) அடுத்த வருடம் கரூரின் மூன்று மாணவர்களால் மேம்படுத்தப்பட்ட ஒரு செய்முறைச் செயற்கைக்கோளை ஏவவுள்ளது.

➢ அந்த மூன்று மாணவர்கள், தாந்தோன்றிமலை கிராமத்தைச் சேர்ந்த M. ஆத்னான், மலைக்கோவிலூர் அருகிலுள்ள நாகம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த M. கேசவன் மற்றும் தேனிலை கிராமத்தைச் சேர்ந்த V. அருண் ஆகியோர் ஆவார். இவர்கள் தங்களது இரண்டு வருட ஆராய்ச்சிக்குப் பின்பு இத்தகைய செயற்கைக்கோளை வடிவமைத்துள்ளனர்.

➢ இந்தியன் செயற்கைக்கோள் என்று அழைக்கப்படும் இந்த செயற்கைக்கோள் 2021 ஜூன் மாதத்தில் NASA-வால் ஏவப்படவுள்ளது.

❖ **ஐக்கிய நாடுகளின் படுகர்கள்**

➢ நீலகிரியிலுள்ள மிக அதிகமான மலைவாழ் சமூகமாக உள்ள படுகர்கள் உலகின் மலைவாழ் மக்கள் தகவல் தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளனர். பாரம்பரியமாக எருமைகளை வளர்த்து பிழைப்பு நடத்திய அவர்கள் இன்று விவசாயத்திற்கு திரும்பி குறிப்பாக இயற்கை விவசாயத்தில் சிறப்பு கவனம் கொண்டுள்ளனர்.

➢ படுகா மொழியென்பது திராவிட மொழிக் குடும்பத்தின் ஒரு குடும்பமாகும் மற்றும் உலகின் பிரதான மொழிக்குடும்பங்களில் திராவிடமொழிக் குடும்பம் தெற்கு, மத்தியம் மற்றும் வட இந்தியாவிலுள்ள 200-மில்லியனுக்கு அதிகமான மக்களைப் பெற்றுள்ளது என்று ஐ.நா கூறுகிறது.

❖ **புகைப்படக்கருவி பொறிகளைப் பயன்படுத்தி புலிகள் எண்ணிக்கைக் கணக்கெடுப்பு**

➢ இக்கணக்கெடுப்பு, ஆனைமலை புலிகள் பாதுகாப்பகத்தின் பொள்ளாச்சி வனக்கோட்டத்தில் நடத்தப்பட்டது.

➢ மொத்தம் 245-ஜோடி புகைப்படக்கருவிகள் 25-நாட்களுக்கு உலண்டி, பொள்ளாச்சி, வால்பாறை மற்றும் மனம்போலி வனச்சரகங்களில் பயன்படுத்தப்பட்டது.

## ❖ இந்திய தொல்லியல் ஆய்வு கணக்கெடுப்பு பிரிவு, திருச்சி

- இந்தியத் தொல்லியல் ஆய்வுக் கணக்கெடுப்பின் ஒரு புதிய நிர்வாக வட்டம் திருச்சியில் நடைமுறைக்கு வந்தது.
- இந்த திருச்சி வட்டம், 20-க்கும் மேலான மத்திய மற்றும் தெற்கத்திய மாவட்டங்களில் அதனுடைய கட்டுப்பாட்டில் 162-நினைவுச்சின்னங்கள் மற்றும் தளங்களைப் பெற்றிருக்கும்.
- இந்திய தொல்லியல் கணக்கெடுப்பின் சென்னை வட்டத்தை பிரித்ததனால் இந்த திருச்சி வட்டம் உருவாக்கப்பட்டது.
- இந்த திருச்சி வட்டம், மத்திய கலாச்சாரா அமைச்சகத்தால் நினைவுச்சின்னங்கள் மேலாண்மையை மேம்படுத்துவதற்கு நாடு முழுவதும் உருவாக்கப்பட்ட இந்திய தொல்லியல் கணக்கெடுப்பின் 7-புதிய வட்டங்களில் ஒன்றாகும்.

## ❖ காவேரி – வைகை – குண்டாறு இணைப்புத் திட்டம்

- இத்திட்டம், மாநிலங்களுக்கிடையேயான ஆறுகள் இணைப்புத்திட்டத்தின் கீழ் அக்னியாறு, தெற்கு வெள்ளாறு, மணிமுத்தாறு, வைகை மற்றும் குண்டாறு போன்றவற்றிற்கு கரூர் மாவட்டத்திலுள்ள மாயனூர் தடுப்பணையிலிரந்து காவேரியின் உபரி நீரை கொண்டு செல்வதற்குரிய 250-கி.மீ-க்கான ஒரு புதிய இணைப்புக் கால்வாயை முன்மொழிந்துள்ளது.
- இத்திட்டம், புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பயனளிக்கும்.

## ❖ 'செங்காந்தல் பூங்கா' – சென்னை

- தமிழ்நாட்டின் அலுவலக மலரான செங்காந்தல் மலருக்கு மதிப்பூட்டும் வகையில் ஒரு புதிய தோட்டம் ரூ.5-கோடி செலவு மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ளது.
- இப்புதிய பூங்கா குறைந்தது 350-லிருந்து 400-வகையான மலர் வகைகளைப் பெற்றிருக்கும். ஆனால் செம்மொழிப்பூங்கா 500-வகையான செடி வகைகளைப் பெற்றுள்ளது.

## ❖ பள்ளிக் கல்வித்துறை

- இத்துறை, ஆசிரியர்களின் நேரடி நியமனத்திற்கான அதிகபட்ச வயது வரம்பை குறைத்துள்ளது.
- அதாவது, பகிரங்கப் போட்டிப் பிரிவுக்காக உயர்ந்தபட்ச வயது 57-லிருந்து 40-வயதாகவும், இடஒதுக்கீட்டுப் பிரிவிற்காக 57-வயதிலிருந்து 45-வயதாகவும் குறைக்கப்பட்டுள்ளது.

## ❖ யாதும் ஊரே – உலக மெய்நிகர் மாநாடு

- வர்த்தக மற்றும் தொழிலின் தெற்கத்திய இந்திய மன்றம் (South India Chamber of Commerce and Industry – SICCI) மற்றும் தமிழ்நாடு அரசாங்கம் ஆகிய இரண்டும் இணைந்து இம்மாநாட்டைக் கூட்டியது.
- இம்மாநாடு உலகமெங்குமுள்ள தமிழர்களை தமிழகத்துடன் தொடர்பு கொள்ளவும் மற்றும் திராவிடக் கலாச்சாரத்தை வளர்க்கவும் உதவுகின்ற வகையில் நோக்கம் கொண்டுள்ளது.

- **வழிகாட்டல் மற்றும் உலகப் பொருளாதார அமைப்பு ஆகிய இரண்டும் இணைந்து இந்தியா மற்றும் தெற்கு ஆசியாவின் முதலாவது மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மையத்தை (Advanced Manufacturing Hub – AMHUB) அமைக்கவுள்ளது.**

    - சென்னையில் அமைந்துள்ள தமிழ்நாட்டின் ஒரு பிரதான முதலீட்டு மேம்பாடு மற்றும் வசதியாக்க முகமையான வழிகாட்டல்(Guidance) என்ற அமைப்புடன் உலகப் பொருளாதார அமைப்பு (World Economic Forum – WEF) இணைந்து இந்தியா மற்றும் தெற்கு ஆசியாவின் முதலாவது மேம்படுத்தப்பட்ட உற்பத்தி மையத்தை (AMHUB) தமிழ்நாட்டில் அமைக்கவுள்ளது.
    - இம்முயற்சி, தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்திக்கொள்கை-2020க்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- **தமிழ்நாடு மின்னணு வன்பொருள் உற்பத்திக் கொள்கை-2020**

    - வெளிநாட்டு முதலீட்டை இத்துறையில் ஈர்க்கும் வகையில் இக்கொள்கையை தமிழ்நாடு வெளியிட்டுள்ளது.
    - 2025-வாக்கில் அதன் உற்பத்தி மதிப்பு அமெரிக்க டாலர் 100-மில்லியன் அதாவது இந்தியாவின் ஒட்டுமொத்த மின்னணு உற்பத்தியில் 25% உயர்த்துவதற்கு தமிழ்நாடு நோக்கம் கொண்டுள்ளது.

    - தமிழ்நாடு இணையப் பாதுகாப்புக்கொள்கை-2020
    - தமிழ்நாடு பிளாக்செயின் கொள்கை-2020
    - தமிழ்நாடு பாதுகாப்பு மற்றும் நெறியான செயற்கை நுண்ணறிவுக் கொள்கை-2020
    - செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின் மற்றும் இணையப்பாதுகாப்புக் கொள்கை-2020 (ABC-கொள்கைகள்)
    - இணைப்பு-2020 என்ற இந்திய தொழில் கூட்டமைப்பின் (Confedration of Indian Industry – CII) மெய்நிகர் நிகழ்வில் இந்த செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின் மற்றும் இணையப்பாதுகாப்புக் கொள்கை-2020ஐ வெளியிட்ட முதல் மாநிலமாக தமிழ்நாடு வந்துள்ளது.

# மாநிலங்கள்

❖ **சிக்கிம் மாநிலத்தின் "Dalle Khursani" என்ற மிளகாய் வகை புவிசார் குறியீட்டைப் பெறுகிறது.**

➢ சிக்கிம் மாநிலம் சார்பாக, வடகிழக்கு பிராந்திய விவசாய சந்தையிடல் கழக நிறுவனம் (North Eastern Regional Agricultural Marketing Corporation Ltd. - NERAMAC), மத்திய அரசாங்கத்தின் தொழில் மற்றும் உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுக்கான துறையிடமிருந்து (Department for Promotion of Industry and Internal Trade – DPIIT) "Dalle Khursani" என்ற மிளகாய் உற்பத்திக்காக புவிசார்க் குறியீட்டைப் பெற்றுள்ளது.

➢ இம்மிளகாய் வகை, உலகிலுள்ள மிகவும் காட்டமான மிளகாய் வகைகளில் ஒன்றாகவும் மற்றும் மிகுந்த மருத்துவ குணங்கள் உடையதாகவும் கருதப்படுகிறது.

➢ இம்மிளகாய் வகை, சிக்கிமிலுள்ள டார்ஜிலிங் பகுதிகளில் பயிரிடப்படுகிறது. இவ்வகை 'கேப்சிகம் குடும்பத்தைச்' சேர்ந்ததாகும்.

❖ **முதலாவது 100% சூரிய சக்தியாக்கப்பட்ட விமானநிலையம்**

➢ இந்திய விமான நிலைய ஆணையகம் (AAI) புதுச்சேரி விமான நிலையத்தை முதலாவது, 100% சூரிய சக்தியாக்கப்பட்ட விமான நிலையமாக மாற்றி அமைத்து அக்டோபர்-2,2020ல் தொடங்கியுள்ளது.

➢ அதற்கான ஆற்றல் 500KW ஆகும் மற்றும் அதற்குரிய செலவு மதிப்பீடு ரூ.2.8-கோடியாகும்.

❖ **மத்திய அரசின் சிறப்புத் திட்டமான 'ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் (JJM)' 'Har Ghar Jal' என்ற இலக்கு**

➢ மத்திய அரசின் சிறப்புத் திட்டமான 'ஜல் ஜீவன் திட்டத்தின்கீழ் (JJM)' 'Har Ghar Jal' என்ற இலக்கை சாதிப்பதற்கு 'BIMARU' (பீகார், மத்தியப்பிரதேஷ், ராஜஸ்தான் மற்றம் உத்திரப்பிரதேஷ்) ஆகிய மாநிலக் குழுக்களிடையே பீகார் மாநிலம் முதலிடம் பெற்றுள்ளது.

➢ இந்த ஜல் ஜீவன் திட்டம், 2024-வாக்கில் நாட்டில் 19-கோடிக்கு மேலான கிராமிய இல்லங்களை உள்ளடக்க நோக்கம் கொண்டுள்ளது.

❖ **'எனது நகரம், எனது பெருமை' – ஜம்மு மற்றும் காஷ்மீர்**

➢ நகர்ப்புறங்களிலுள்ள மக்களுக்கு வீட்டுக்கு வீடு சேவை புரிவதற்கு எனது நகரம், எனது பெருமை (My Town, My Pride) என்ற திட்டத்தை ஜம்மு மற்றும் காஷ்மீர் யூனியன் பிரதேச துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்கா அறிவித்துள்ளார்.

➢ இத்திட்டம், மூன்று முக்கிய நோக்கங்களை உள்ளடக்கியுள்ளது. அவை பின்வருமாறு:

1. நகர்ப்புறங்களில் பொதுமக்களின் எல்லையை ஊக்கப்படுத்துதல்
2. அடிமட்ட நிலையில் ஜனநாயகத்தை பலப்படுத்துதல்
3. வீட்டுக்கு வீடு பணி செய்தல்

❖ **சக்தி திட்டம் (Mission Sakthi) – உத்திரப்பிரதேஷ்**

- **Mission Sakthi** என்ற ஒரு புதிய பெண்கள் அதிகாரத்துவத் திட்டத்தை உத்திரப்பிரதேச அரசாங்கம் தொடங்கியுள்ளது.
- மாநிலத்தில் பெண்களுக்கு எதிரானக் குற்றங்களை குறைப்பதற்கும் மற்றும் அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்ப்படுத்துவதற்கும் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

❖ **மத்திய அரசின் மூன்று பண்ணைச் சட்டங்களை மறுக்கும் மசோதாவை இயற்றியுள்ள முதல் மாநிலமாக பஞ்சாப் முன்வந்துள்ளது.**

- சமீபத்தில் மத்திய அரசு இயற்றிய மூன்று பண்ணைச் சட்டங்களை மறுத்து ஒரு மசோதாவை மாநிலச் சட்டசபையில் ஒருமனதாக சட்டம் நிறைவேற்றப்பட்டது.

❖ **"Tarang Suposhit Maharashtracha"**

- தாய் மற்றும் குழந்தைகளின் சத்துணவுத் தேவைகளை வழங்குவதற்கு, "Tarang Suposhit Maharashtracha" என்ற ஒரு எண்ணியல் மேடையை மகாராஷ்டிரா மாநிலத்தின் பெண்கள் மற்றும் குழந்தை நலத்துறை தொடங்கியுள்ளது.

# தேசிய நிகழ்வுகள்

❖ **தபால் வாக்குமுறையில் திருத்தங்கள்**

➢ 1951-மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு-50இன்கீழ் கீழ்க்குறிப்பிட்டப் பிரிவினர் விதிவிலக்கு அளிக்கப்பட்டு அவர்கள் தபால் வாக்களிக்கலாம் என்று கூறுகிறது.
1. தேர்தல் பணியிலுள்ள வாக்காளர்கள்
2. 80-வயதிற்கு மேற்பட்டோர் அல்லது இயலாமையுடைய வாக்காளர்கள்
3. தடுப்புகாவல் சட்டத்தின்கீழுள்ள வாக்காளர்கள்
4. பணி வாக்காளர்கள் (இராணுவம், மாநில ஆயுதக்காவல்படை, வெளிநாடுகளில் பணிபுரியும் அரசு ஊழியர்)

❖ **'India one'**

➢ முன்னர், ஏர் இந்தியா விமானத்தின் போயிங்-747 விமானங்கள் மூலமாக 'AI One' என்ற பெயரில் மாமனிதர்கள் உலகம் முழுவதும் பறந்தனர்.
➢ அந்த விமானங்கள் தற்போது 'இரண்டு B777' விமானங்களாக மாற்றப்பட்டுள்ளது.
➢ எனவே, புதிய மிக மிக முக்கியஸ்தர்கள் விமானம் **'India one'** என்றழைக்கப் படுகிறது.
➢ **'India one'** என்பது உலகில் மிகவும் நவீனமான மற்றும் எல்லா வசதிகளுடன் கூடிய மிக மிக முக்கிய நபர்களின் விமானமாகும்.
➢ அவர்கள் டெல்லியிலிருந்து உலகின் எப்பகுதிக்கும் இவ்வித விமானங்கள் மூலம் நிறுத்தமின்றி சென்றுவரலாம்.

❖ **இந்தோ – டச்சு புரிந்துணர்வு ஒப்பந்தம்**

➢ 2030-வாக்கில் கார்பன் உமிழ்வுகளின் தீவிரத்தை 33% - 35% ஆகக் குறைத்து பன்னாட்டு ரீதியாக ஒரு நிலைநிறுத்தப்பட்ட இலக்கை அடைவதற்கு இந்தியா முயற்சி மேற்கொண்டுள்ளது.
➢ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், நிதி ஆயோக்கின் தலைமைச் செயல்அலுவலர் அமிதாப்கான் மற்றும் இந்தியாவுக்கான நெதர்லாந்து நாட்டுத் தூதுவர் மார்ட்டன் வான் டன் பெர்க் ஆகிய இருவரால் கையொப்பமிடப்பட்டது.
➢ இக்கலத்தில் நெதர்லாந்து நாட்டுடன் ஒப்பிடும்போது இந்தியாவின் கார்பன் தொழில்நுட்பங்கள் அதிக நிபுணத்துவம் பெற்றவையாகும்.
➢ கார்பன் குறைப்பு என்பது ஆற்றல் ஆதாரங்களின் கார்பன்-டை-ஆக்ஸைடை குறைப்பதை (அ) போக்குவதைக் குறைக்கும்.

❖ **ICMR – ஊட்டச்சத்து தேசிய நிறுவனம் (National Institute of Nutrition–NIN)**

➢ இந்த அமைப்பு, இந்தியாவின் இளமையான ஆண் (அ) பெண் என்பதற்கு ஏற்கனவே வயது 20-30 வருடங்களாக இருந்ததை தற்போது வயது 19-39 வருடங்களாக மாற்றி உள்ளது.
➢ அதேபோல, இவ்வகை ஆண் மற்றும் பெண் எடை ஏற்கெனவே முறையே 60-கிலோ மற்றும் 50-கிலோ என்றிருந்ததை தற்போது முறையே 65-கிலோ மற்றும் 55-கிலோ என்று நிர்ணயித்துள்ளது.
➢ இவை, தேசிய குடும்பநல கணக்கெடுப்பு – 4 (National Family Health Survey – NFHS-4, 2015-16), தேசிய சத்துணவு மதிப்பீட்டுக்கழகம் (National Nutrition Monitoring

Bureau –NNMB, 2015-16), உலக சுகாதார அமைப்பு (WHO, 2006-07) மற்றும் இந்திய குழந்தை மருத்துவக் கழகம் (Indian Accademy of Paediatrics – IAP, 2015) ஆகியவற்றின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகும்.

- இந்த அமைப்பு, உரிய 'பரிந்துரைக்கப்பட்ட உணவுப் படிகளையும்' (Recommended Dietary Allowances – RDA) பரிந்துரைத்துள்ளது.

### ❖ "Google India - இயக்கம்" சிறியதைப் பலப்படுத்துக (Makes Small Strong)

- இந்த இயக்கம், நுகர்வோர் பங்கெடுப்பு மூலமாக சிறிய மற்றும் உள்ளூர் வியாபாரிகளுக்கு உதவி புரிவதற்கு தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த புதிய எண்ணியல் முயற்சி சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரிகளிடமிருந்து வரும் கருத்துக்களின் அடிப்படையில் அமைந்துள்ளது.
- இவ்வியக்கம், **ஜாக்ரான் பிரகாஷன் நிறுவனத்துடன்** இணைந்து கூகுள் நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ❖ "கங்கா அவ்ளோகான்" (Ganga Avlokan)

- பிரதமர் நரேந்திர மோடி **Ganga Avlokan** என்று பெயரிடப்பட்டுள்ள கங்கா மீதான நாட்டின் முதலாவது அருங்காட்சியகத்தை நாட்டிற்கு அர்ப்பணித்தார்.
- மேலும், உத்தரகாண்டிலுள்ள கழிவுநீர்த் திட்டம் தொடர்பான 6-நமாமி கங்கா திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- அந்நிகழ்வின்போது, "Rowing down the Ganges" என்ற நூலையும் அவர் வெளியிட்டார்.
- இந்த நூல், தூய்மை கங்காவுக்கான தேசிய திட்டம் மற்றும் இந்திய வனவிலங்கு நிறுவனம் ஆகிய இரண்டு அமைப்புக்களும் இணைந்து வெளியிடப்பட்டது.
- அந்நிகழ்வின்பொது, 'ஜல் ஜீவன் திட்டத்தை' அமல்படுத்துவதற்கு கிராம ஊராட்சிகள் மற்றும் பாணி சமித்தீஸ்-களுக்கான செயல்பாட்டு வழிகாட்டுதல்கள் அடங்கிய 'Margdarshika' என்ற ஜல் ஜீவன் திட்டத்தின் சின்னத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

### ❖ ஊரக மேம்பாட்டுக்கான CSIR தொழில்நுட்பங்கள்

- இவ்விதத்தில் உன்னத் பாரத் அபியான் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம், IIT டெல்லி, CSIR, உன்னத் பாரத் அபியான் மற்றும் விஜ்நான பார்த்தி (VIBHA) ஆகிய அமைப்புகள் இணைந்து தொடங்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம், CSIR-ன் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் மேம்பாட்டு ஆய்வுகளுக்கான தேசிய நிறுவனத்தின் (National Institute Science, Technology and Development Studies – NISTAD) நிறுவனத்தின் 40-வது ஆண்டு நிறைவு விழாவின் நிகழ்ச்சியின்போது தொடங்கப்பட்டுள்ளது.

- **இந்தியாவில் ஜவுளி பாரம்பரியம் மீதான பன்னாட்டு வெபினார் (Webinar – Online seminar) நடத்தப்பட்டது.**

  - அதில், இந்தோனேசியா, வியட்நாம், பங்காளதேஷ், தஜிகிஸ்தான், பூடான், பஹ்ரைன், கொரியக்குடியரசு, தாய்லாந்து, ஆப்கானிஸ்தான், பெலாரஸ், இலங்கை மற்றும் உஜ்பெகிஸ்தான் ஆகிய 12-நாடுகளைச் சேர்ந்த நெசவாளர்கள் பங்கேற்றனர்.
  - இந்நிகழ்வு, இந்நாடுகளிடையே உள்ள ஜவுளிப் பாரம்பரியங்களை பகிர்ந்து கொள்வதற்குரிய சிறந்த மேடையாக அமைந்தது.
  - இந்தியாவில் ஜவுளித்துறை சுயசார்பு இந்தியா என்ற 'ஆத்ம நிர்பார் பாரத்'ஐ மேம்படுத்துவதற்கு முக்கியப் பங்காற்றுகிறது.

- **தூய்மை கங்காவுக்கான தேசியத் திட்டம் (National Mission for Clean Ganga –NMCG)**

  - கங்கா டால்பின் தினமான அக்டோபர்-5 நிகழ்ச்சி, கங்கையாற்றின் 6-இடங்களில் 'Dalphin Jalaj Safari' திட்டத்தை இந்த NMCG தொடங்கியுள்ளது.
  - அந்த 6-இடங்கள் கங்கையாற்று வழியே உத்திரப்பிரதேசத்தில் பிஜ்நார், பிரிஜ்காட், பிரயாகிராஜ் மற்றும் வாரணாசி ஆகிய நான்கு இடங்கள், பீகாரில் கஹால்கான் மற்றும் மேற்கு வங்கத்தில் பந்தல் ஆகியவைகளாகும்.
  - இம்முயற்சி, கங்காவின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் மற்றும் அப்பகுதியில் சுற்றுலாவை மேம்படுத்தவும் நோக்கம் கொண்டுள்ளது.
  - 'கங்கா பிரஹரிஸ்' (Ganga Praharis) என்ற பயிற்சியளிக்கப்பட்ட தன்னார்வலர்கள் கங்காவிலுள்ள டால்பின்களை பார்வையிடும் சுற்றுலாப் பயணிகளுக்கு படகுகளை இயக்குவார்கள்.
  - இதைத் தவிர, பிஜ்நாரிலிருந்து நரோரா வரையுள்ள 250 கி.மீ தூரத்தில் டால்பின் கணக்கெடுப்பை நடத்துவதற்குரிய 'எனது கங்கா எனது டால்பின்' (My Ganga My Dolphin) என்ற ஒரு புதிய இயக்கமும் தொடங்கப்பட்டது.

- **தொற்றுநோய் தயாரிப்புக் கண்டபிடிப்புகளுக்கான கூட்டமைப்பு (Coalition for Epidemic Preparedness Innovations – CEPI)**

  - COVID-19க்கு எதிரான உலக தடுப்பூசி சோதனை இணைப்பணிக்காக ஒரு இந்திய ஆய்வுக்கூடத்தை தொற்றுநோய் தயாரிப்புக் கண்டபிடிப்புகளுக்கான கூட்டமைப்பு தேர்வு செய்துள்ளது.
  - அதற்காக, பெயர்வு சுகாதார அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (Translational Health Science and Technology Institute – THSTI) தேர்வு செய்யப்பட்டுள்ளது.
  - இந்நிறுவனம்(THSTI) உயிரித் தொழில்நுட்பத் துறையின் (Department of Bio-Technology – DBT) ஒரு தன்னிச்சையான நிறுவனமாகும்.
  - CEPI –ன் இணைப்பணி 6-ஆய்வுக்கூடங்களில் செயல்படும்.

## ❖ இந்தியாவின் முதலாவது ஐந்து விலங்குப் பாலங்கள் (India's First 5"Animal Bridges)

- 2024-வாக்கில் முடிவடையவுள்ள மிக நீண்ட டெல்லி-மும்பை பசுமைக்கள துரிதவழி உட்பட, சாலைக் கட்டுமானத்தை மேம்படுத்தும் ஒரு பகுதியாக நாட்டில் பல துரிதவழித் திட்டங்கள் அமல்படுத்தப்படுகின்றன.
- அவைகளில் ஒன்று டெல்லி-மும்பை துரிதவழி திட்டமாகும். இதில் வனவிலங்குகள் சாலையைக் கடப்பதற்காக 2.5 கி.மீ-க்கும் அதிகமான நீளமுள்ள இந்தியாவின் முதலாவது 5-விலங்குப்பாலங்கள் அமைக்கப்படவுள்ளது.
- நெதர்லாந்திலுள்ள வன விலங்கு கடப்புகள் இவ்விதப் பாலங்கள் அமைப்பதற்கு அடித்தளமாக உள்ளன.
- இந்த டெல்லி-மும்பை துரிதவழியில் ராஜஸ்தானிலுள்ள ரன்தாம்பூர் மற்றும் முகுந்ரா(டாரா) வனவிலங்கு சரணாலயங்களை இணைக்கும் விதத்தில் ஒவ்வொரு 500 மீ இடைவெளியில் இவ்வித பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

## ❖ "பிரதம மந்திரி சுவாநிதி" (PM SVANidhi)

- முழுஅடைப்பிற்கு பின்பு தெருவோர வியாபாரிகள் (மார்ச்-24, 2020க்கு முன்பு) தங்களுடைய வாழ்வாதாரங்களை மீட்பதற்கு ரூ.10,000வரை கடன் பெறுவதற்கான 'பிரதம மந்திரி தெரு வியாபாரிகளின் ஆத்ம நிர்பார் நிதி' (Prime Minister Street Vendors Atma Nirbhar Nidhi – PMSVANidhi) என்ற திட்டத்தை ஜீன்-20ல் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- இத்திட்டத்தின்கீழ் தெருவோர வியாபாரிகளை அதிகாரப்படுத்துவதற்காக, அக்டோபர்-5, 2020ல் மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் Swiggy என்ற நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளது. இது, தெருவோர வியாபாரிகளை மேம்படுத்தும் முயற்சியாகும்.
- இத்திட்டத்தின் முன்னோட்டமாக, குஜராத்திலுள்ள அகமதாபாத், தமிழ்நாட்டின் சென்னை, டெல்லி, மத்தியப்பிரதேசத்திலுள்ள இந்தூர், வாரணாசி ஆகிய ஐந்து நகரங்களிலிருந்து 250-தெருவோர வியாபாரிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## ❖ 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2019இல் அபாயகரமான சல்பர்-டை-ஆக்ஸைடின்(SOD) உமிழ்வில் 6% சரிவை இந்தியா பதிவு செய்துள்ளது.

- கடந்த 4-ஆண்டுகளில் நாட்டில் அதிகபட்ச சரிவு முதல்முறையாக நடந்தது இதுவாகும்.
- இருப்பினும், இந்தியா கடந்த 5-ஆண்டுகளாக அதிக உமிழ்வு பட்டியலில் இடம் பெற்றிருப்பது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

## ❖ கஸ்தூரி காட்டன் இந்தியா

- உலக பருத்தி தினமான அக்டோபர்-7,2020 நிகழ்வின்போது, மெய்நிகர் மூலமாக மத்திய அமைச்சர் ஸ்மிர்தி ராணி இந்திய பருத்திக்கான சின்னத்தை தொடங்கி வைத்தார்.
- உலக பருத்தி வர்த்தகத்தில் இந்தியாவின் பிரிமியம் பருத்தி கஸ்தூரி பருத்தி (Ksaturi Cotton) என்று அழைக்கப்படுகிறது.
- இப்பருத்தி, வெண்மை, பிரகாசம், மென்மை, தூய்மை, ஒளிர்வு, விநோதம் மற்றும் இந்தியத்தன்மை போன்றவற்றை பிரதிபலிக்கிறது.

- இந்தியாவின் பிரதான வர்த்தகப் பயிர்களில் பருத்தியும் ஒன்றாகும் மற்றும் வருடத்திற்கு 6-மில்லியன் டன் பருத்தி மகசூல் ஆகிறது. இது உலக பருத்தி உற்பத்தியில் 23% ஆகும்.
- உலகிலுள்ள இயற்கைப் பருத்தி உற்பத்தியின் 51%ஐ இந்தியா உற்பத்தி செய்கிறது.
- பருத்தி பயிரிடும் விவசாயிகள் விவரங்கள் தெரிந்துகொள்வதற்காக இந்திய பருத்திக்கழகம் (Cotton Corporation of India – CCI) "Cott Ally" என்ற ஒரு கைபேசி செயலியையும் தொடங்கியுள்ளது.

❖ **அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ள 'நெச்சிப்பூ சுரங்கம்'**

- மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், எல்லைப் பகுதிகளிலுள்ள 7-மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிடையே எல்லை சாலைகள் அமைப்பால் (Border Roads Organization – BRO) கட்டப்படும் 44-பாலங்களை மெய்நிகர் ரீதியாக தொடங்கிவைத்தார்.
- மேலும், அவர் அருணாச்சலப்பிரதேசத்தில் உள்ள தாவாங்கிற்கு செல்லும் சாலைவழி மீது 450-மீ நீளமுள்ள நெச்சிப்பூ சுரங்கம் என்ற இருவழிச்சுரங்கத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

❖ **கேரளா கர்சேகா சேமநலநிதி வாரியம் (Kerala Farmers Welfare Fund Board)**

- கேரள அரசாங்கம் மாநிலத்தில் விவசாயிகளின் மேம்பாட்டிற்காக இந்த வாரியத்தை அமைத்துள்ளது.
- விவசாயிகளின் மேம்பாட்டிற்காக சேமநலநிதி வாரியம் அமைப்பது இந்தியாவில் இதுவே முதன்முறையாகும்.
- தனிநபர் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், நோய்ப் பயன்பாடு, இயலாமைப் பயன்பாடு, மருத்துவ உதவி, திருமணம் மற்றும் மகப்பேறு படி, கல்வி உதவி மற்றும் ஈமச்சடங்கு பயன்பாடு போன்றவைகள் இந்த வாரியத்திலுள்ள உறுப்பினர்களான விவசாயிகள் பெறுவார்கள்.

❖ **இந்திய ஆற்றல் வடிவமைப்பு நிறுவனத்தின் (India Energy Modeling Forum – IEMF) ஆளுகை அமைப்பை நிதிஆயோக் அறிவித்துள்ளது.**

- அமெரிக்க-இந்திய யுக்தி ஆற்றல் பங்காண்மையின் (Strategic Energy Partnership – SEP) கீழ் நிதி ஆயோக் மற்றும் பன்னாட்டு மேம்பாட்டிற்கான அமெரிக்க முகமை (United States Agency for International Development – USAID) ஆகிய இரண்டும் இணைந்து இந்த அமைப்பை (IEMF) தொடங்கியுள்ளன.
- இந்த அமைப்பு (IEMF), இந்திய ஆய்வாளர்கள், அறிவுசார் நிபுணர்கள், தேசிய மற்றும் பன்னாட்டு அரசு முகமைகள் மற்றும் துறைகளை நீண்டகால நோக்குடன் ஆற்றல் திட்டமிடுதலில் ஈடுபடுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.

❖ **பள்ளிக்கல்வியை மேம்படுத்துவதற்கான உலக வங்கி உதவித் திட்டம் 'STARS'**

- 'STARS' என்பது பயிற்றுவித்தல் - கற்றலை பலப்படுத்துதல் மற்றும் அரசுகளுக்கான விளைவுகள் (Strengthing Teaching – Learning and Results for States) திட்டமாகும்.

- இத்திட்டத்தை அமல்படுத்தவதற்கு உலக வங்கி நிதியுதவியாக 500-மில்லியன் டாலரை (ஏறக்குறைய ரூ.3200-கோடி) வழங்கவுள்ளது.

**❖ காமதேனு தீபாவளி அபியான்**

- இத்திட்டம், மீன்வளம், கால்நடைப்பராமரிப்பு மற்றும் பால்வளத்திற்கான மத்திய அமைச்சகத்தால் அமல்படுத்தப்படுகிறது.
- இத்திட்டம் அல்லது இயக்கம், தீபாவளி காலத்தின்போது பசுமாட்டுச் சாணத்தின் விரிவானப் பயன்பாட்டை மேம்படுத்துவதற்கு நோக்கம் கொண்டுள்ளது.
- இது, விவசாயிகளுக்கும் மற்றும் இது தொடர்பான வியாபாரிகளுக்கும் வியாபாரத்தைப் பெருக்குவதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

**❖ e – சஞ்சீவினி டெலிமெடிசன் இயக்கம்**

- மத்திய சுகாதார அமைச்சகத்தால் சமீபத்தில் தொடங்கப்பட்ட இவ்வியக்கம் 5-லட்சம் தொலைதூர மருத்துவ ஆலோசனைகளை பதிவு செய்துள்ளது.
- இத்திட்டத்தின் முதல் மூன்று மாநிலங்கள் முறையே தமிழ்நாடு (1,69,977-பதிவுகள்), உத்திரப்பிரதேசம் (1,34,992-பதிவுகள்) மற்றும் இமாச்சலப்பிரதேசம் (39,326-பதிவுகள்) ஆகியவை ஆகும்.

**❖ 'பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்' (Tech For Tribals)**

- பழங்குடி விவகாரங்களுக்கான மத்திய அமைச்சகத்தின் 'TRIFED' (Tribal Cooperative Marketing Development Federation of India Limited) என்ற அமைப்பு, சட்டிஸ்கர் MFP-கூட்டமைப்பு மற்றும் IIT-கான்பூர் ஆகியவற்றுடன் இணைந்து 'பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்' (Tech For Tribals) என்ற ஒரு புதிய திட்டத்தைத் தொடங்கியுள்ளது.
- இத்திட்டம், பழங்குடியினரின் தொழில்முனைவோர் மேம்பாடு திறன் மேம்பாடு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துகிறது.

**❖ ராஜமாதா விஜயராஜி சிந்தியா-வை பெருமைப்படுத்தும் ரூ.100 நாணயம்**

- பிரதமர் நரேந்திர மோடி இராஜமாதா விஜியராஜி சிந்தியாவின் 100-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு ஒரு மெய்நிகர் நிகழ்வு மூலமாக அவரைப் பெருமைப்படுத்தும் விதத்தில் புதிய 100-ரூபாய் நாணயங்களை வெளியிட்டார்.

**❖ உணவு மற்றும் விவசாய அமைப்பின் (Food and Agruculture Organization – FAO) 75ஆம் ஆண்டு நிறைவு**

- FAO-வின் 75வது ஆண்டு நிறைவு நிகழ்ச்சி நாளான அக்டோபர்-16,2020ல் பிரதமர் நரேந்திர மோடி புதிய 75-ரூபாய் நாணயங்களை வெளியிடவுள்ளார்.
- இந்த நிகழ்வு, FAO-வுடனான இந்தியாவின் நீண்டகால உறவைக் குறிப்பிடும்.

❖ **தீன் தயாள் அந்தியோதயா ராஷ்ட்ரிய ஆர்ஜீவிகா திட்டம்**

- ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய இரண்டு யூனியன் பிரதேசங்களிலுள்ள 10.58-லட்சத்திற்கும் அதிகமான பெண்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன்பாடுகளை விரிவுபடுத்துவதற்கு மத்திய அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இத்திட்டத்தின்கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு புதிதாக உருவாக்கப்பட்ட இந்த யூனியன் பிரதேசங்களுக்கு ரூ.520-கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ **பன்னாட்டு சூரிய சக்தி கூட்டமைப்பின் (International Solar Alliance – ISA) தலைவர்**

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான மத்திய அமைச்சகம், பன்னாட்டு சூரிய சக்தி கூட்டமைப்பின் தலைவராக இந்தியா மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்பதை அறிவித்துள்ளது.

❖ **ஜம்மு மற்றும் காஷ்மீரில் 'ஜொஜிலா சுரங்கம்'**

- தேசிய நெடுஞ்சாலை-1ன் (NH-1) மீது **ஸ்ரீநகர் பள்ளத்தாக்கு மற்றும் லே** இடையே அனைத்து காலங்களிலும் இணைப்பை ஏற்படுத்துவதற்கு ஜம்மு மற்றும் காஷ்மீரில் ஏறக்குறைய 3000-மீ உயரத்துடன் 14.15-கி.மீ ஜொஜிலா சுரங்கம் அமைப்பதற்காக முதலாவது வெடிவைக்கும் பணிகளை, சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை மற்றும் சிறு குறு நடுத்தர தொழில்களுக்கான மத்திய அமைச்சகங்களின் அமைச்சர் நிதின் ஜெய்ராம் கட்கரி தொடங்கிவைத்தார்.
- இத்திட்டம், தேசிய நெடுஞ்சாலை மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டுக்கழக நிறுவனத்தால் (National Highways and Infrastructure Development Corporation Ltd. – NHIDCL) அமல்படுத்தப்படும் மற்றும் அதன் கட்டுமானப்பணிகள் ஹைதராபாத்தில் அமைந்துள்ள மெகா பொறியியல் மற்றும் கட்டுமான நிறுவனத்தால் (Mega Engineering and Infrastructure Ltd. – MEIL) மேற்கொள்ளப்படும்.

❖ **அறிவுசார் சொத்துரிமை (Intellectual Property - IP) கல்வி அறிவிற்கான 'KAPILA' கலாம் திட்டத்தை மெய்நிகர் ரீதியாக மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிசாங்க் தொடங்கிவைத்தார்.**

- முன்னாள் ஜனாதிபதி மற்றும் புகழ்பெற்ற விஞ்ஞானியுமான டாக்டர். APJ அப்துல்கலாமின் 89-வது பிறந்தநாள் நிகழ்வான அக்டோபர்-15,2020ல், அறிவுசார் சொத்துரிமை(IP) கல்வி மற்றும் விழிப்புணர்வு இயக்கத்திற்காக 'KAPILA' கலாம் திட்டத்தை மெய்நிகர் ரீதியாக மத்திய கல்வி அமைச்சர் ரமேஷ் பொக்ரியால் நிசாங்க் தொடங்கிவைத்தார்.
- APJ – Avul Pakir Jainulabdeen

❖ **பன்னாட்டு உணவு மற்றும் விவசாய வாரம்-2020 - இந்தியாவின் 14-வது கூட்டம்**

- உணவு மற்றும் விவசாய வாரம் அக்டோபர்-16,2020 முதல் அக்டோபர்-22,2020 வரை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- உணவு மற்றும் விவசாய வாரத்தைக் குறிக்கும் விதத்தில், உணவுப் பதனிடும் தொழில்களுக்கான மத்திய அமைச்சகத்தால் “Anna Devo Bhava” விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

**❖ தேசிய தகவல் மையம் (NIC), IEEE கணினி சமூகம் மற்றும் அதிசயம் ஆகிய அமைப்புகள் இணைந்து Thon-2020 என்ற அரசு தொழில்நுட்பத்தை ஏற்படுத்தவுள்ளன.**

- இது, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான மத்திய அமைச்சகத்தின்கீழ் தொடங்கப்படவுள்ளது.
- இது ஒரு மெய்நிகர் நிகழ்வாகும். மாணவர்கள், பணியாளர்கள், புதிய நிறுவனங்கள், தொழில்நுட்பவாதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் போன்றவை இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**❖ இந்தியாவின் விமான நிலைய நகரம் (Aerotropolis of India)**

- உத்திரப்பிரதேச மாநிலம் கௌதம்புத் நகரிலுள்ள ஜீவர் நாட்டிலுள்ள பல விமான நிலைய நகரங்களில் ஒன்றாக அமையவுள்ளது.

**❖ “ஆயுஸ்மான் சாகர் திட்டம்”**

- இத்திட்டம், தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழகத்தால் (National Co-operative Development Corporation – NCDC) உருவாக்கப்பட்டுள்ளது.

**❖ அசாமில் கொண்டாடப்பட்ட ‘கட்டி பிகு’ (Kati Bihu) திருவிழா**

- ‘கட்டி பிகு’ என்பது, அஸ்ஸாம் மாநிலத்தில் கொண்டாடப்படும் மூன்று பிகு திருவிழாக்களில் (விவசாயத் திருவிழாக்கள்) ஒன்றாகும்.
- ‘கட்டி பிகு’’ என்பது ஏழைகளின் திருவிழாவான ‘கங்காலி பிகு’ என்றும் அழைக்கப்படுகிறது.
- அசாம் மொழியில் ‘கொங்கால்’ (Kongal) என்பது ஏழை மக்களைக் குறிக்கும் மற்றும் இத்திருவிழா அக்டோபர் மாத இடையில் கொண்டாடப்படுகிறது.

**இந்தியாவின் முதலாவது பலதரப்பட்ட மாதிரி தளவாடங்கள் பூங்கா அசாமில் அமையவுள்ளது.**

**❖ ‘COVID-19’-னை சோதனை செய்வதற்கு ‘Covirap’ என்ற ஒரு நவீனமான தொழில்நுட்பம்**

- ‘COVID-19’ னை சோதனை செய்வதற்கு கராக்பூர் உருவாக்கிய ஒரு நவீன தொழில்நுட்பமான கோவிராப் (Covirap), வர்த்தகப் பயன்பாட்டிற்காக மருத்துவ ஆய்வின் இந்தியக் கவுன்சிலால் (ICMR) சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

❖ **தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்**

- இந்த அமைச்சகம், தொழிற்சாலைப் பணியாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டின் (Consumer Price Index for Industrial Workers – CPI-IW) அடிப்படை ஆண்டு 2001ஐ 2016ஆக மாற்றியமைத்துள்ளது.
- இம்முயற்சி, பல்வேறு செலவினங்களின் விலை உயர்வு ஏற்பட்டதை ஈடுகட்டும் மற்றும் பிரதிபலிக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# இந்தியா மற்றும் இதர நாடுகள்

**நிதி ஆயோக் (NITI Aayog) மற்றும் நெதர்லாந்து தூதரகம், புது டெல்லி.**

- தூய்மையான மற்றும் அதிக ஆற்றலுக்கு இடமளிக்கும் வகையில் கார்பனிறக்கம் (decarbonization) மற்றும் ஆற்றல் மாற்ற நிகழ்ச்சி நிரலை ஆதரிப்பதற்காக அவர்கள் ஒரு நோக்க அறிக்கை (Statement of Intent) ஒன்றில் கையெழுத்திட்டனர்.
- அந்த நோக்க அறிக்கையில் நிதிஆயோக்கின் முதன்மைச் செயல் அலவலர் அமிதாப் காந்த் மற்றும் இந்தியாவிற்கான நெதர்லாந்து தூதர் மார்டென் வேன் டென் பெர்க் ஆகியோர் கையெழுத்திட்டனர்.
- தொழில்துறை மற்றும் போக்குவரத்துத் துறைகளில் நிகர கார்பன் தடத்தை குறைப்பதும் உயிர் ஆற்றல் தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதுமே நோக்க அறிக்கையின் நோக்கமாகும்.
- காலநிலை நெகிழ்வு பொருளாதார வளர்ச்சியை உருவாக்குதல் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கான சூழலைப் பாதுகாத்தல் ஆகிய இரண்டு நோக்கங்களை நோக்க அறிக்கை நிறைவு செய்கிறது.
- 2030ஆம் ஆண்டுக்குள் உமிழ்வுகளின் தீவிரத்தை 33 விழுக்காடு முதல் 35 விழுக்காடு வரை குறைக்க இந்தியா உறுதிபூண்டுள்ளது.

**வங்காளதேசம் தனது 50வது ஆண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தில் பங்கேற்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுத்துள்ளது.**

**புவியியல் ஒத்துழைப்புக்கான அடிப்படைப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தம் (Basic Exchange and Cooperation Agreement for Geospatial Cooperation)**

- இந்தியாவும் அமெரிக்காவும் தங்களிடையே புவியியல் புலனாய்வு பரிமாற்றத்தை மேற்கொள்வதற்காக புவியியல் ஒத்துழைப்புக்கான அடிப்படைப் பரிமாற்றத்திற்கான நான்காவது மற்றும் கடைசி அடித்தள ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

**இந்தியாவும் மாலத்தீவுகளும்**

- பிரத்யேக பொருளாதார மண்டலங்கள் மீதான கண்காணிப்பை மேம்படுத்துவதற்காகவும், பயங்கரவாதிகள் மீது ஒரு கண் வைத்திருப்பதற்காகவும், இந்தியா மாலத்தீவுகளுக்கு ஒரு டோர்னியர் விமானத்தை வழங்கியுள்ளது.

- **மொனாலி தேசாய்** - கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தின் 800 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில், அந்தப் பல்கலைக் கழகத்தின் சமூகவியல் துறையின் தலைவராகப் பொறுப்பேற்ற இந்திய வம்சாவளியைச் சேர்ந்த முதல் பெண்மணி என்ற வகையில் வரலாற்றை ஏற்படுத்தியுள்ளார்.

**ஆவா மூர்ட்டோ பின்லாந்தின் ஒரு நாள் பிரதமராக பணியாற்றினார்.**

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் சர்வதேச பெண் குழந்தை தினத்தின் (11 அக்டோபர், 2020) ஒரு பகுதியாக, பாலின சமத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, 16 வயதேயான ஆவா மூர்ட்டோ 2020 அக்டோபர் 7ஆம் தேதி ஒரு நாள் பின்லாந்து பிரதமர் பதவியை ஏற்றுக் கொண்டார்.

**லூயிஸ் ஆர்ஸ் (Luis Arce)**

- பொலிவியாவின் ஜனாதிபதி தேர்தலில் லூயிஸ் ஆல்பர்ட்டோ ‘லுச்சோ’ ஆர்ஸ் கேடகோரா வெற்றி பெற்றதாக பொலிவியாவின் உச்ச தேர்தல் தீர்ப்பாயம் முறையாக அறிவிப்பு செய்தது.

# சர்வதேச நிகழ்வுகள்

❖ **இந்திய மற்றும் மியான்மர் ஆகிய இருநாடுகளும் FOC-யின் 19வது கூட்டத்தை மெய்நிகர் வழியில் நடத்தின.**

- கலாடன் (Kaladan Multimodel Project) பன்மைமாதிரித் திட்டத்தின் மீதான வெபினாருக்கும்(Webinar) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
- கலாடன் திட்டம் என்பது, இவ்விரு நாடுகளுக்கிடையேயான சிறந்த இணைப்பை உருவாக்கக்கூடிய முதலாவது எல்லை வழியான திட்டமாகும்.
- இத்திட்டத்திற்கான நிலம் மற்றும் பாதுகாப்பை மியான்மர் வழங்குகின்ற வேலையில், அதற்குரிய மொத்த செலவு மதிப்பீட்டையும் இந்தியா ஏற்றுக்கொள்கிறது.

❖ **இரண்டாவது நாற்கர அமைச்சர்கள் கூட்டம்**

- இங்கே நாற்கரம் என்பது, இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நான்கு நாடுகளைக் குறிக்கிறது.
- இந்நான்கு நாடுகளின் அமைச்சகக் கூட்டம் ஜப்பானின் டோக்கியோ நகரில் நடைபெற்றது.
- இக்கூட்டம் பிரதானமாக பாதுகாப்பைப் பற்றிய ஆலோசனை செய்யும்.
- இக்கூட்டம், இந்திய - ஆசியான் இணைப்பிலிருந்து கிழக்கு – மேற்கு இணைப்பை ஏற்படுத்துவதற்கு விவாதித்துள்ளது.
- சீனாவின் வடக்கு – தெற்கு இணைப்பை எதிர்ப்பதற்காக இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

❖ **கனடாவில் இந்திய முதலீட்டு மாநாடு**

❖ **அக்டோபர்-7, 2020 பார்னட்ஸ் கடலில் அமைந்துள்ள இலக்கை தாக்குவதற்கு வெள்ளைக்கடலில் வெற்றிகரமாக TSIRKON என்று அழைக்கப்படும் ஹைபர்சோனிக் கப்பல் ஏவுகணையை ரஷ்யா சோதனை செய்தது.**

❖ **இந்தியா மற்றும் நெதர்லாந்து ஆகிய இரு நாடுகள் e-சுகாதாரத் திட்டத்தில் ஒத்துழைக்கின்றன. இந்தியாவின் தேசிய எண்ணியல் சுகாதார திட்டத்தின் (National Digital Health Mission – NDHM) ஒரு பகுதியாக இத்திட்டம் உள்ளது.**

❖ **இஸ்ரேலியத் தூதரகம் இந்தியாவில் முதலாவது நீர் இணைப்பகத்தை (Water Attache) பெறவுள்ளது.**

- இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய இருநாடுகளும் நீர் மேலாண்மையில் ஒரு யுக்தி பங்காண்மையை பகிர்ந்து கொள்கின்றன.
- அதைப் பலப்படுத்தும் விதத்தில், ஜனவரி-2021 லிருந்து இந்தியாவில் முதலாவது தனியான நீர் இணைப்பகத்தை இஸ்ரேல் பெறவுள்ளது.
- இது, இந்தியாவின் நீர் மேலாண்மை மற்றும் விவசாயத்துறைகளின் மேம்பாட்டிற்கான சிறந்த நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ளும்.
- கொரானாவிற்குப் பின்பு இந்தியாவில் மிகப்பெரிய சவால்களில் ஒன்றாக தண்ணீர் பிரச்சனை குறிப்பிடத்தக்கதாகும்.

- **அக்டோபர்-16, 2020ல், அந்தோரா என்ற நாடு முறைப்படியாக பன்னாட்டு பணநிதி அமைப்பின் 190-வது உறுப்பினராக இணைந்துள்ளது.**

- **G-20 ஊழல் எதிர்ப்பு பணிக்குழுவின் முதலாவது அமைச்சகக் கூட்டத்தில் ஜித்தியேந்திர சிங் உரையாற்றினார்.**

- **வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organization – NATO) உறுப்பு நாடுகளின் 30-பாதுகாப்பு அமைச்சர்கள், ஜெர்மனியின் ராம்ஸ்டெயினிலுள்ள NATO-விமானப்படைத் தளத்தில் ஒரு புதிய வானியல் மையத்தை அமைக்க திட்டமிட்டுள்ளனர்.**

- **அணு ஆயுதத் தடுப்பு மீதான பன்னாட்டு ஒப்பந்தம் (International Treaty on the Prohibition of Nuclear Weapons – TPNW)**

  - அணு ஆயுதங்களை தடை செய்வதற்கு இவ்வித ஒப்பந்தத்திற்கு 50-நாடுகள் ஒப்புதல் அளித்தள்ளன என்று ஐ.நா. சபை அறிவித்துள்ளது.
  - இந்த வரலாற்று ஒப்பந்தம் ஜனவரி-2021ல் நடைமுறைக்கு வரும்.

- **மூன்றாவது இந்தியா – அமெரிக்க 2+2 பேச்சுவார்த்தை டெல்லியில் நடத்தப்பட்டது.**

  - இந்த பேச்சுவார்த்தையில் இந்தியா சார்பாக பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் வெளியுறவு அமைச்சர் S. ஜெய்சங்கர் ஆகியோரும், அமெரிக்கா சார்பாக அந்நாட்டு அரசு செயலர் மைக் போம்பியோ என்று அறியப்படும் மைக்கேல் ரிச்சர்ட் போம்பியோ மற்றும் பாதுகாப்புச் செயலர் மார்க் தாமஸ் எஸ்பர்க் ஆகியோரும் பங்கேற்றனர்.
  - இந்த அமைச்சகப் பேச்சுவார்த்தையில் இணை அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.
  - அடிப்படைப் பரிமாற்றம் மற்றம் கூட்டுறவு ஒப்பந்தம் (Basic Exchange and Co-operation Agreement – BECA) மற்றும் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இவ்விரு நாடுகளும் கையொப்பமிட்டன.
  - இவ்வொப்பந்தம், இரு நாடுகளின் ராணுவத் தொழில்நுட்பம், பலதரப்பட்ட செயற்கைக்கோள் தகவல் மற்றும் பிரச்சினைக்குரிய தகவல் போன்றவற்றின் பகிர்மானத்தை உள்ளடக்குகிறது.

- **ஆறாவது பிரிக்ஸ் (BRICS) பாராளுமன்ற அமைப்பு**

  - லோக்சபை சபாநாயகர் ஓம் பிர்லா, ஆறாவது பிரிக்ஸ் பாராளுமன்ற அமைப்பில் மெய்நிதிகர்ரீதியாக உரையாற்றினார்.
  - இந்தக் கூட்டத்தின் முக்கியக் கருத்து ‘பன்னாட்டு ஸ்திரத்தன்மை, பொதுப்பாதுகாப்பு மற்றும் புத்தாக்க வளர்ச்சி போன்றவற்றில் பிரிக்ஸ் பங்காண்மை’ என்பதாகும்.
  - இந்த ஆறாவது பிரிக்ஸ் பாராளுமன்ற அமைப்பின் தலைவர் ரஷ்ய கூட்டாட்சி சபையின் சபாநாயகர் Vyachaslav Volodin ஆவார்.

# நியமனங்கள்

- UNESCO-க்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாக விஷால் V. ஷர்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

- ஜெசிந்தா ஆர்டன் என்ற பெண் நியூசிலாந்து நாட்டின் பிரதமராக இரண்டாவது முறை வெற்றி பெற்றுள்ளார்.

- அக்டோபர் மாதத்திற்கான ILO-வின் நிர்வாக அமைப்புத் தலைவராக அபூர்வ சந்த்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

APOLLO STUDY CENTRE

# திட்டங்கள்

❖ **பழங்குடியின இந்திய E-சந்தை (Tribes India E-Market)**

- நாடு முழுவதுமுள்ள பல்வேறு வகையான கைவினைப்பொருட்கள், கைத்தறிகள் மற்றும் இயற்கை உணவுப்பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் 5-லட்சம் பழங்குடியின மக்களை உள்ளடக்கும் நோக்கத்தை பெற்றுள்ள 'TRIFED' (Tribal Co-operative Marketing Development Federation of India) மூலமாக இந்த பழங்குடியின இந்திய E-சந்தை முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- 'TRIFED' என்ற அமைப்பு 1987ல் தொடங்கப்பட்டதாகும்.
- இந்த அமைப்பு பழங்குடி மக்களின் பல்வேறு உற்பத்திகளை சந்தையிடுவதற்கு வசதியளிக்கிறது.

❖ **ஜல் ஜீவன் திட்டம்**

- இத்திட்டம், 2024-வாக்கில் ஒவ்வொரு வீட்டிற்கும் தண்ணீர் குழாய் இணைப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டுள்ளது.
- தற்போது, இந்தியாவிலுள்ள 81.67% வீடுகள் குழாய் நீர் விநியோகத்தை பெறவில்லை.
- இத்திட்டம், தேசிய, மாநில, மாவட்ட மற்றும் கிராம ஊராட்சி மட்டங்களில் அமல்படுத்தப்படுகிறது.
- ஜல் சக்திக்கான மத்திய அமைச்சர் கிராம ஊராட்சிகள் மூலமாக பள்ளிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு குழாய் தண்ணீர் விநியோகம் அளிப்பதற்கான 100-நாட்கள் இயக்கத்தை தொடங்கி வைத்தார்.
- இந்த இயக்கம், மகாத்மாகாந்தியின் 151வது பிறந்த நாளைக் குறிக்கும் விதத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

❖ **கிராமப்புற மூத்த குடிமக்களுக்கான கணினி அறிவை வழங்குவதற்கு Help Age India – என்ற அமைப்புடன் பொது சேவை மையம் (CSC) இணைந்துள்ளது.**

- இந்த இணைப்பு (அ) பங்கான்மையின் முக்கிய நோக்கம் கிராமப்புற மூத்த குடிமக்களுக்கு கணினி அறிவை வழங்குவதாகும்.
- பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சசக்த்ரா அபியான் மூலமாக, பொது சேவை மையம் கிராமப்புறங்களிலுள்ள வாய்ப்பில்லாத குழுக்களின் குடிமக்களுக்கு இவ்வித கணினி பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறது.
- நாடு முழுவதும் ஒவ்வொரு பிளாக்கிலும் ஒரு மையம் வீதம் ஏறக்குறைய 7000 CSC கல்வி மையங்களை அமைப்பதற்கு CSC திட்டமிட்டுள்ளது.
- ஏற்கனவே, பொது சேவை மையம் நாட்டின் பல்வேறு இடங்களில் 5000-க்கு மேற்பட்ட மையங்களை அமைத்துள்ளது.

❖ **'SWAMITVA' (உடைமை) திட்டம்**

- கடன் பெறுதல் மற்றும் இதர நிதிப் பயன்பாடுகளுக்கு கிராம மக்கள் தங்களது சொத்துக்களை நிதி சொத்தாக ஆக்குவதற்கு இத்திட்டம் ஊக்குவிக்கிறது.

- SMS இணைப்பைப் பயன்படுத்தி சொத்து அட்டைகளை பதிவிறக்கம் செய்வதற்கு ஒரு லட்சம் மதிப்புடைய சொத்து வைத்திருப்போருக்கு இத்திட்டம் ஊக்கமளிக்கிறது.
- இத்திட்டம், தேசிய பஞ்சாயத்துராஜ் தினமான ஏப்ரல்-24, 2020ல் பஞ்சாயத்துராஜ் அமைச்சகத்தால் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம், கிராமப்புறங்களிலுள்ள வீட்டு உரிமையாளர்களுக்கு உரிமைப்பதிவு (Record of Rights) அட்டையை வழங்கும் நோக்கம் கொண்டுள்ளது.

❖ **இந்தியா முழுவதும் பிரதான நிறுவனங்களில் மிகைக்கணினி கட்டுமானம் (Super Computing Infrastructure)**

- இந்தியாவில் இவ்வித மிகைக்கணினி கட்டுமானத்தை ஏற்படுத்துவதற்கு தேசிய மிகைக்கணினி திட்ட (National Super Computing Mission) நிறுவனங்களுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மேம்படுத்தப்பட்ட கணினி மேம்பாட்டிற்கான மையம் (Centre for Development of Advanced Computing – C-DAC) மையம் கையொப்பமிட்டுள்ளது.
- மிகைக்கணினி கட்டுமானம் தொடர்பான பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பின்வரும் நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.
  1. இந்திய அறிவியல் நிறுவனம் (IISC), பெங்களூர்.
  2. இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் (IIT), கான்பூர், ரூர்கி, ஹைதராபாத், கௌஹாத்தி, மாண்டி மற்றும் காந்திநகர்.
  3. தேசிய தொழில்நுட்ப நிறுவனம் (NIT), திருச்சி.
  4. தேசிய விவசாய உணவு உயிரிதொழில்நுட்ப நிறுவனம் (NABI), மொகாளி.
  5. உயர் செயல்பாட்டு கணினி மற்றும் செயற்கை நுண்ணறிவில் முக்கிய மையங்கள், IIT சென்னை, காரக்பூர், கோவா மற்றும் பாலக்காடு.

❖ **'TRIFED, IIT கான்பூர் மற்றும் சட்டிஸ்கர் MFP (Minor Forest Produce) கூட்டமைப்பு ஆகிய மூன்றும் இணைந்து 'பழங்குடியினருக்கான தொழில்நுட்பம்' (Tech for Tribals) என்ற மெய்நிகர் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.**

- இத்திட்டம், பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான நோக்கம் கொண்டுள்ளது.
- குறிப்பாக, தொழில்முனைவோர் மேம்பாடு, திறன்பயிற்சி, தகவல்தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக மேம்பாடு போன்றவற்றில் இத்திட்டம் நோக்கம் கொண்டுள்ளது.

❖ **5000-பின்தங்கிய கிராமப் பஞ்சாயத்துகளுக்கு அதிவேக செயற்கைக்கோள் இணைப்பை ஏற்படுத்துவதற்கு, BBNL (Bharat Broadband Nigam Ltd.,) மற்றும் TCIL (Telecommunications Consultants India Ltd.,) ஆகிய இரண்டும் இணைந்து 'Huges India' என்ற தனியார் தகவல்தொடர்பு நிறுவனத்தை அக்டோபர்-13, 2020ல் தேர்வு செய்துள்ளன.**

- இந்த 5000-கிராமப் பஞ்சாயத்துகள் 15-மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்குள் அடங்கும்.
- இதன் முக்கிய நோக்கம், ஆகஸ்ட்-2021 வாக்கில் லடாக், அருணாச்சலப்பிரதேஷ், மிசோரம் மற்றும் திரிபுரா போன்ற எல்லைப்பகுதி மற்றும் நக்சல் பாதித்த பகுதிகளில் அதிவேக செயற்கைக்கோள் இணைப்பை வழங்குவதாகும்.

- ‘Hughes India’ என்ற தேர்வு செய்யப்பட்ட தனியார் தகவல்தொடர்பு நிறுவனம், GSAT-19 மற்றும் GSAT-11 போன்ற ISRO-வின் தகவல்தொடர்பு செயற்கைக் கோள்களிடமிருந்து இணைப்புத்திறனைப் பெற்று கிராமப்பஞ்சாயத்துகளுக்கு இணையதள சேவையை வழங்கும்.

- **ஒட்டுமொத்த இரயில் பயணத்தில் ஏறுமிடத்திலிருந்து இறங்குமிடம் வரை பெண் பயணியர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு ‘செயல்பாடு எனது நண்பன்’ (Operation My Saheli) என்ற திட்டத்தைத் தென்கிழக்கத்திய இரயில்வே(SER) தொடங்கியுள்ளது.**

# குழுக்கள்

- **இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட குழுக்கள்**

  - வேட்பாளர்களின் செலவின வரம்புகள் மீதான பிரச்சனைகளை ஆய்வதற்கு ஒரு குழுவை இந்தியத் தேர்தல் ஆணையம் அமைத்துள்ளது.
  - இக்குழுவில், முன்னாள் இந்திய வருவாய்ப் பணி அலுவலர் மற்றும் தலைமை இயக்குநர் (புலனாய்வு) ஹரிஸ் குமார் மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்தின் பொதுச்செயலர் மற்றும் தலைமை இயக்குநர் (செலவினம்) உமேஷ் சின்கா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

- **பஞ்சாப், ஹரியானா மற்றும் உத்திரப்பிரதேச மாநிலங்களின் விவசாயிகளால் (துரும்பு) எரிக்கப்படுவதைத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு ஓய்வுபெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி மதன் B. லோக்கர் என்பவரை உள்ளடக்கிய ஒரு உறுப்பினர்க்குழு நியமிக்கப்பட்டுள்ளது.**

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- சென்னையைச் சேர்ந்த விண்வெளி தொடக்க நிறுவனமான அக்னிகுல் காஸ்மோஸ், அமெரிக்காவின் கோடியக் தீவில் உள்ள பசிபிக் ஸ்பேஸ்போர்ட் காம்ப்ளக்ஸ் அலாங்காவில் (PSCA) இருந்து அதன் ஏவுகணை வாகனமான அக்னிபானை சோதிக்க அலாஸ்கா ஏரோஸ்பேஸ் கார்ப்பரேஷனுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

- **கல்பனா சாவ்லா – வர்ஜீனியாவில் உள்ள நாசாவின் வாலோப்ஸ் விமான தளத்திலிருந்து விண்ணில் ஏவப்பட்டது.**
    - இந்திய – அமெரிக்க விண்வெளி வீரர் கல்பனா சாவ்லாவுக்கு அர்பணிக்கப்பட்ட அமெரிக்க மறுபயன்பாட்டு விண்கல ஓடம் வர்ஜீனியாவில் உள்ள மத்திய அட்லாண்டிக் பிராந்திய விண்வெளி ஏவுதளம் பேட்- O.A வில் இருந்து சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு அனுப்பப்பட்டது.
    - எஸ்.எஸ். கல்பனா சாவ்லா என்பது அமெரிக்க நிறுவனமான நார்த்ரோப் க்ரூமன் உருவாக்கிய சிக்னல் விண்கலம் ஆகும்.
    - இது ஆன்ட்ரேஸ் ராக்கெட்டில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு NGI-14 பணிக்காக அனுப்பப்பட்டது.

- **ICMR, பயாலஜிக்கல் இ - கோவிட் 19 க்கு சிகிச்சையளிக்க சுத்திகரிக்கப்பட்ட "குதிரை ஆன்டிசெரமை" உருவாக்கியது:**
    - இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) மற்றும் ஹைதராபாத்தை தளமாகக் கொண்ட பயாலஜிக்கல் - இ லிமிட்டெட் ஆகியவை கோவிட் - 19 நோய்த்தடுப்பு மற்றும் சிகிச்சைக்காக மிகவும் சுத்திகரிக்கப்பட்ட "குதிரை ஆன்டிசெரா.ை.லை உருவாக்கியுள்ளது.
    - இது புனேவில் (மகாராஷ்டிரா) உள்ள ICMR தலைமையிலான தேசிய வைராலஜி நிறுவனத்தால் தனிமைப்படுத்தப்பட்டது.

- **நவம்பர் 2020-க்குள் உலகின் முதல் சுரங்க ரோபாவான "சிறுகோள் சுரங்க ரோபோ" (Astroid Mining Robot) ஐ சீனா விண்வெளிக்கு அனுப்பவுள்ளது: IEEE ஸ்பெக்ட்ரம் அறிக்கை:**
    - பெய்ஜிங்கை தளமாகக் கொண்ட ஆர்ஜின் ஸ்பேஸ் உலகின் முதல் சுரங்க ரோபோவை "சிறுகோள் சுரங்க ரோபோ" என்ற பெயரில் 2020 நவம்பருக்குள் விண்வெளிக்கு அனுப்ப திட்டமிட்டுள்ளது.
    - 30 கிராம் எடையுள்ள விண்கலமான NEO-1 ஆனது சீனாவின் லாங்மார்க்ச் ராக்கெட்டில் இரண்டாம் நிலை சுமைகளாக ஏவப்படும்.
    - 2021 – ன் பிற்பகுதியில் அல்லது 2022 – ன் தொடக்கத்தில் விண்ணில் ஏவப்படவுள்ள "லிட்டில் ஹப்பிள்" என்ற புனைபெயர் கொண்ட யுவான்வாங் - 1 (லுக் அப் - 1) என்ற மற்றொரு திட்டத்தையும் இந்நிறுவனம் கொண்டுள்ளது.

- **ஐ.ஓ.ஆர் பிராந்தியத்திற்கான கடல்சார் கண்காணிப்பு செயற்கைக்கோள்களின் விண்மீன் கூட்டம்:**
    - ஐ.ஓ.ஆர்-ல் கப்பல்களைக் கண்காணிக்க இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணைந்து செயற்கைக் கோள்களை இயக்கவுள்ளன.
    - தேசிய விண்வெளி ஆய்வுகள் மையம் (CNES) மற்றும் இந்தியா விண்வெளி ஆராய்ச்சி நிறுவம் (ISRO) ஆகியவை இணைந்து இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்திற்கான கடல்சார் கண்காணிப்பு செயற்கை கோள்களின் விண்மீன் தொகுப்பை (IOR) ஏவுகின்றன.
    - செயற்கைக் கோளின் பாகங்கள் இரு நாடுகளிலும் கட்டமைக்கப்படும் மேலும் இது இந்தியாவில் இருந்து ஏவப்படும்.
- **ஐ.ஐ.டி. கரக்பூர் - "ஜமெடிக்கஸ்" என்ற டெலிமெடிசின் ஹோம்கேர் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது:**
    - இந்திய தொழில்நுட்பக் கழகம் (ஐஐடி) கரக்பூரின் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை (CSE) ஆனது, மருத்துவரின் தொலைநிலை ஆலோசனை மூலம் நோயாளிகளுக்கு முக்கிய மருத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்காக "ஜமெடிக்ஸ்" என்ற கோவிட் - 19 க்கு நடுவில் ஹோம்கேர் டெலிமெடிசின் தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.
- **பரம்சித்தி – AI':**
    - உயர் கணினி மேம்பாட்டு மையம் (C-DAC), இந்தியாவின் உயர்கணித்திறன் கொண்ட செயற்கை நுண்ணறிவு மீவேகக் கணினியான "பரம் சித்தி – AI" ஐ உருவாக்கியுள்ளது.
    - இந்த மீவேகக் கணினியானது அறிவியல் மற்றும் பொறியியலில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்கான சூழலை உருவாக்கும்.
- **எபிவாக் கொரோனா:**
    - ஆரம்பகட்ட சோதனைகளுக்குப் பிறகு "எபிவாக் கொரோனா" எனப்படும் 2வது கோவிட் - 19 தடுப்பூசிக்கு ரஷ்யா ஒப்புதல் அளித்துள்ளது.

- **பெபி கொலம்போ விண்கலம்:**
    - பெபி கொலம்போ விண்கலமானது புதனை நோக்கிய பயணத்தில் வெள்ளி கிரகத்தைக் கடந்துள்ளது.
    - புதன் கிரகத்தை ஆராய ஜப்பான் விண்வெளி ஆய்வு நிறுவனம் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவை இணைந்து இந்த விண்கலம் ஏவப்பட்டது.
    - ஏரியேன் 5 ராக்கெட்டில் ஏவப்பட்ட பெபி கொலம் போவானது 2025ல் புதன் கிரகத்தை சென்றடையும்.
- **ரஷ்ய சோயுஸ் விண்கலம் 1 நாசா விண்வெளி வீரர் மற்றும் 2 ரஷ்ய விண்வெளி வீரர்களுடன் ஏவப்பட்டது:**
    - அக்டோபர் 14, 2020 அன்று கஜகஸ்தானில் உள்ள பைகோனூர் காஸ்மோடிரோமிலிருந்து ஏவப்பட்ட ரஷ்யாவின் சோயுஸ் MS-17 விண்கலமானது நாசா

விண்வெளி வீரர் கேட் ரூபின்ஸ் மற்றும் செர்ஜி குட்-ஸ்வெர்கோவ் ஆகியோரை சுமந்து சென்றது.

## முபே (Moopay):

- "முபே" என்ற பெயரில் கால்நடை வளர்ப்பு விவசாயிகளுக்கான முதலாவது தானியங்கி மின்னணு பணப்பரிமாற்ற செயலியை ஸ்டெல்லாப்ஸ் என்ற நிறுவனம் ராஜஸ்தானில் அறிமுகப்படுத்தியது.

- **ஹீங் சாகுபடி இந்தியாவில் முதன் முறையாக தொடங்குகிறது**

    - பொதுவாக அசா.ஃ.போடிடா சாகுபடி என்று அழைக்கப்படும் ஹீங் (.ஃ.பெருலா அச.ஃ.போடிடா) சாகுபடி இந்தியாவில் முதன் முறையாகத் தொடங்கப்பட்டது.

    - ஹீங்கின் முதல் பயிரிடலானது இமாச்சல பிரதேசத்தின் ஹொல் மற்றும் ஸ்பிட்டியில் செய்யப்பட்டது.

    - ஹீங் இந்திய உணவு வகைகளில் பரவலாகப் பயன்படுத்தப்படும் பொருள் ஆகும். இது பொதுவாக ஆப்கானிஸ்தான் ஈரான் மற்றும் உஸ்பெகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

- **"ஏலிய பின் பூட்டுதல்" மற்றும் "ஏவுவதற்கு முன் பூட்டுதல்" கொண்ட SANT ஏவுகணை:**

    - ஒடிசாவின் சண்டிபூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பில் (ITR) மேற்கூரை ஏவுதளம் ஒன்றிலிருந்து ஸ்டாண்ட் ஆ.ஃ.ப் டேங்க் எதிர்ப்பு ஏவுகணையை (SANT ஏவுகணை) வெற்றிகரமாக சோதித்தது.

    - இந்த ஏவுகணையானது "ஏவிய பின் பூட்டுதல்" மற்றும் "ஏவுவதற்கு முன் பூட்டுதல் ஆகிய திறன்களைக் கொண்டுள்ளது

    - இந்த ஏவுகணை நியமிக்கப்பட்ட நிலையான இலக்கை அதிக துல்லியத்துடன் தாக்கியது.

- **தேசிய மீக்கணித்திறன் திட்டம்**

    - தேசிய மீக்கணித்திறன் திட்டத்தின் மூன்றாம் கட்டம் 2021 ஜனவரியில் தொடங்கப்படும் என்று அறிவியல் மற்றும் தொழிநுட்பத்துறை அறிவித்துள்ளது.
    - பணியின் மூன்றாம் கட்டம் கணினி வேகத்தை 45 பெட்டா.ஃ.பிளாப்புகளாக அதிகரிக்கும்.
    - முன்னதாக மீக்கணினி மேம்பாட்டு மையம் (C-DAC) மற்றும் தேசிய மீக்கணித்திறன் திட்டம் ஆகியவை அக்டோபர் 12, 2020 அன்று இந்தியாவின் முன்னணி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்தனர்

- **இ-தார்தி ஜியோ போர்டல்:**

    - வரைபடங்கள் மற்றும் குத்தகை திட்டங்கள் உள்ளிட்ட மரபு வரைபடங்களை மேலாண்மை தகவல் அமைப்புடன் (MIS) இந்தத் தளம் ஒருங்கிணைக்கிறது.

- **நிலவின் கிளாவியஸ் பள்ளத்தில் சூரிய ஒளிபடும் மேற்பரப்பில் நீர்:**

    - முதன்முறையாக, தேசிய விண்கல மற்றும் விண்வெளி ஆய்வு மையத்தின் (NASA) அகச்சிவப்பு வானியலுக்கான அடுக்குமண்டல ஆய்வு ஊர்தி (SOFIA) சந்திரனில் சூரிய ஒளிபடும் மேற்பரப்பில் தண்ணீர் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

- சந்திரனின் தெற்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ள பூமியிலிருந்து தெரியும் மிகப்பெரிய பள்ளங்களில் ஒன்றான கிளாவியஸ் பள்ளத்தில் நீர் மூலக்கூறுகள் இருப்பதை சோ.ஃ.பியா (SOFIA) கண்டறிந்துள்ளது.

- **ZSI மற்றும் BSI பாபுல் சுப்ரியோவால் தொடங்கப்பட்டது:**

    - இது 2019ம் ஆண்டில் இந்தியாவின் பன்முகத்தன்மைக்கு 544 இனங்கள் சேர்க்கப்பட்டுள்ளது. விலங்கு கண்டுபிடிப்புகள் 2019 மற்றும் தாவர கண்டுபிடிப்புகள் 2019ன் ZSI & BSI பாபுல் சுப்ரியாவால் தொடங்கப்பட்டது.

- **பேரழிவை இரட்டிப்பாக்கக்கூடிய காலநிலை மாற்றம்: பேரழிவுகளின் மனித செலவு:**

    - பேரழிவு அபாயக் குறைப்புக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் (UNDRB) "பேரழிவுகளின் மனித செலவு: கடந்த 20 ஆண்டுகளின் (2000-2019) ஒரு கண்ணோட்டம்" என்ற தலைப்பில் அறிக்கையை வெளியிட்டது.
    - இது கடந்த 20 ஆண்டுகளில் இயற்கை பேரழிவு இரட்டிப்பாவதற்கு காலநிலை மாற்றமே முக்கிய காரணம் என்று கூறுகிறது.
    - அக்டோபர் 13, 2020 அன்று பேரழிவு அபாயக் குறைப்பிற்கான சர்வதேச தினத்தைக் குறிக்கும் வகையில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

- **பீகாரின் கபர்தல் ஈரநிலம் ராம்சார் தளமாக சேர்க்கப்பட்டுள்ளது:**

    - ராம்சார் மாநாடு பீகாரின் பெகுசாரையில் உள்ள கன்வர்ஜில் என்றும் அழைக்கப்படும் கபர்தல் ஈரநிலத்தை சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த தளமாக அறிவித்தது.

# மாநாடு / கூட்டங்கள்

- **ரெய்ஸ் 2020 – "சமூக அதிகாரமளித்தலுக்காக பொறுப்புணர்வு உள்ள செயற்கை நுண்ணறிவு (AI) 2020:**
  - ரெய்ஸ் 2020 – "சமூக அதிகாரமளித்தலுக்காக பொறுப்புணர்வு உள்ள செயற்கை நுண்ணறிவு 2020 – 5 நாள் உலகளாவிய AI (செயற்கை நுண்ணறிவு) மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி மெய்நிகர் முறையில் துவக்கி வைத்தார்.
  - மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகமும் நிதி ஆயோக் உம் சேர்ந்து நடத்தும் இந்த மாநாடு வரும் 5-ஆம் தேதி முதல் ஒன்பதாம் தேதி வரை நடைபெற்றது.

- **Y 20 – மாநாடு:**
  - உலகெங்கும் உள்ள இளைஞர்களுக்கு அதிகாரமளிப்பதற்கான சிந்தனைகள் மற்றும் பேச்சுவார்த்தைகளை பரிமாறிக் கொள்வதற்காக முதல் சர்வதேச மெய்நிகர் லு 20 மாநாட்டை சவுதி அரேபியாவால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த மாநாட்டில் மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. கிரன் ரிஜிஜூ இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டார்.
  - இந்த மாநாட்டின் கருப்பொருள்
    கோவிட் - 19 க்கு பிந்தைய வாய்ப்புகள் பற்றிய அரசு - இளைஞர்களின் பேச்சுவார்த்தை

- **பொன்விழா கொண்டாட்டங்கள்:**
  - வங்கதேசம் விடுதலைப் போரின் பொன்விழாவையும் மற்றும் இராஜதந்திர உறவுகளின் 50-வது ஆண்டு விழாவையும் கூட்டாக கொண்டாட இந்தியா மற்றும் வங்கதேசம் முடிவு செய்தன.
  - டிசம்பர் 16 ஆம் தேதி டாக்கா, புது தில்லி மற்றும் கொல்கத்தாவில் கூட்டு இராணுவ அணிவகுப்புகள் குறித்தும் இரு தரப்பினரும் விவாதித்தனர்.
  - 1971 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட இந்தியப் போர் வீரர்களை இந்த நிகழ்வில் மரியாதை செல்லுத்தப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

- **டிஜிட்டல் அருங்காட்சியகம்:**
  - இந்தியா, வங்கதேசம் மற்றும் பிற இடங்களில் பங்கபந்து – பாபு டிஜிட்டல் அருங்காட்சியகம் நடைபெறும்.

- **மூன்றாவது ஜி – 20 ஷெர்பா கூட்டம்:**
  - செப்டம்பர் 29, 2020 அன்று ஜி 20 ஷெர்பா கூட்டம் சவூதி அரேபியாவின் அதிபரின் கீழ் நடந்தது.
  - இந்த கூட்டத்தில் மத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரபு இந்தியாவின் சார்பில் கலந்துகொண்ட பிரதிநிதியாவார்
  - இவர் ஜி 7 மற்றும் ஜி – 20 க்கு இந்தியாவின் ஷெர்பா (தூதர்) ஆவார்.

- **"GCTC எரிசக்தி பாதுகாப்பு மாநாடு 2020 - இந்தியா:**
  - GCTC எரிசக்தி பாதுகாப்பு மாநாட்டை சர்வதேச தீவிரவாத எதிர்ப்பு குழு ஏற்பாடு செய்யப்பட்டது.

- இந்த மாநாட்டின் கருப்பொருள்:
  ”கோவிட் - 19க்கு பிந்தைய உலகில் எரிசக்தி பாதுகாப்பு கட்டமைப்பு“

- **பிரகாஷ் ஜவடேகர் பல்லுயிர் தொடர்பான ஐ.நா. உச்சி மாநாட்டில் உரையாற்றினார்.**

  - “நிலையான வளர்ச்சிக்கான பல்லுயிர் மீதான அவசர நடவடிக்கை” என்ற தலைப்பில் செப்டம்பர் 30, 2020 அன்று, மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் ஐ.நா. பல்லுயிர் தொடர்பான உச்சி மாநாட்டில் உரையாற்றினார். ஐ.நா. பொது சபையின் தலைவர் வோல்கன் போஸ்கிர் அவர்களால் இந்த மாநாடு கூட்டப்பட்டது.

  - ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் பல்லுயிரினங்கள் தொடர்பான உச்சி மாநாடு இதுவே முதல் முறை ஆகும். 2011-2020 பல்லுயிர் தொடர்பான ஐ.நா. தசாப்தத்தின் முடிவை நெருங்கி வருவதினால் பல்லுயிரியலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

  - இந்தியா சுமார் 3 மில்லியன் ஹெக்டேர் காடு மற்றும் மரங்களை வளர்த்துள்ளது. இது நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவில் 24.56% ஒருங்கிணைந்த காடு மற்றும் மரங்களை மேம்படுத்தியுள்ளது.

  - இந்தியா 26 மில்லியன் ஹெக்டேர் சீரழித்த மற்றும் காடழிக்கப்பட்ட நிலங்களை மீட்டெடுப்பதையும் மற்றும் 2030 க்குள் நில சீரழிவு நடுநிலைமை அடைவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

  - மேலும் கூடுதலாக 2022 ஆம் ஆண்டில் ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக்கை அகற்றுவதற்கும் மற்றும் 2030 க்குள் 450 GW புதுப்பிக்கத்தக்க ஆற்றலை நிறுவுவதற்கும் ஆகிய இலக்குகளை இந்தியா நிர்ணயித்துள்ளது.

  - 2020 க்குப் பிந்தைய உலகளாவிய பல்லுயிர் கட்டமைப்பை 2021 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள 15வது உயிரியல் பன்முகத்தன்மை தொடர்பான மாநாட்டிற்கான (CRD) கட்சிகளின் மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்படும். இயற்கையைப் பாதுகாப்பதற்கும் மற்றும் முயற்சிகளை மேம்படுத்த ஒரு நல்ல வாய்ப்பை ஊடீனு வழங்கும்.

  - இந்தியா பல்லுயிர் பாதுகாப்பிற்காக இரண்டு மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. செப்டம்பர் மாதம் 2019 ஆண்டில் புதுடெல்லியில் COP 14 UNCCD (ஐக்கிய நாடுகள் சபையின் பாலைவனமாக்கலுக்கான மாநாடு) மற்றும் பிப்ரவரி 2020 இல் குஜராத்தின் காந்தி நகரில் இடம் பெயர்ந்த இனங்கள் தொடர்பான மாநாடு COP 13 நடைபெற்றது

- **“இந்தியா பிவி எட்ஜ் 2020“:**

  - இந்தியாவில் அதிநவீன சூரிய மின்சக்தி தகடுகள் உற்பத்தியை ஊக்குவிக்க இந்த இணைய கருத்தரங்களை ஏற்பாடு செய்துள்ளது.

  - இந்திய அரசாங்கம், ஆரம்பத்தில் 2022 க்குள் 20 GW திறன் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இந்த இலக்கை நான்கு ஆண்டுகளுக்கு முன்னதாகவே அடையப்பட்டுள்ளது.
  - பின்னர் 2030 ம் ஆண்டுக்கான 450GW புதுப்பிக்கத்தக்க மின்சக்தி உற்பத்தி செய்ய இலக்கை மாற்றி அமைத்தது. இதில் 300 WG இலக்கை சூரிய மின்சக்தி மூலம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று நிர்ணயித்துள்ளது.

  - இந்த இலக்கை அடைய, இந்தியா 42 சூரிய பூங்காக்களை நிறுவியுள்ளது
  - சூரிய மின்சக்தி உற்பத்தியில் உலகின் 3வது பெரிய நாடாக இந்திய உருவாகியுள்ளது.

- ஹரியானா மாநிலத்தில் உள்ள குருகிராம்மை தலைநகரமாக கொண்ட சர்வதேச சூரிய மின்சக்தி கூட்டணி (ISA) என்ற ஒரு அமைப்பை இந்தியா தொடங்கியுள்ளது,
- ஒட்டுமொத்த உலகத்தையும் சூரிய எரிசக்தியின் மூலம் இணைக்கும் வகையில் "ஒரே உலகம், ஒரு சூரியன், ஒரே அமைப்பு" மற்றும் "உலக சூரிய மின்சக்தி வங்கி" என்ற திட்டத்தை இந்தியா தொடங்கியுள்ளது.

- **ஷீவிக் பாராதட்டிய வை∴யானிக் (வைபல் 2020):**

  - வைபவ் 2020 மாநாடு என்ற அழைக்கப்பட்ட இந்திய மற்றும் வெளிநாட்டு வாழ் இந்திய விஞ்ஞானிகள் மற்றும் கல்வியாளர்கள் பங்கேற்ற உலகளாவிய மெய்நிகர் மாநாட்டை பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

  - இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகர் தலைமையிலான அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்துறைகள், 200 இந்திய கல்வி மையங்கள் இதனை ஒருங்கிணைத்துள்ளன.

- **பிரதமர் நரேந்திர மோடி மற்றும் சீன அதிபர் ஜி ஜின் பிங் - 12வது பிரிக்ஸ் உச்சி மாநாடு:**

  - இந்த 5-நாடு பிரிக்ஸ் கூட்டமைப்பின் தற்போதைய தலைவரான ரஷ்யா இருப்பதினால் மாஸ்கோவில் இந்த மாநாடு நடைபெற்றது.
  - உலக நிலத்தன்மை, பகிர்ந்தளிக்கப்பட்ட பாதுகாப்பு மற்றும் புதுமையான வளர்ச்சி" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருள் ஆகும்.
  - BRICS – பிரேசில் ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா

- **ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா வெளியுறவு அமைச்சர்கள் - டோக்கியோவில்:**
  - இரண்டாவது QUAD (ஆஸ்திரேலியா, இந்தியா, ஜப்பான், அமெரிக்கா) வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் டோக்கியோவில் நடைபெற்றது. இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் கலந்துகொண்டார்.

  - QUAD அமைச்சர்கள் கூட்டத்தை வருடாந்திர நிகழ்வாக நடத்த தலைவர்கள் முடிவு செய்யப்பட்டன.

- **13வது இந்தியா – ஜப்பான் வெளியுறவு அமைச்சர்களின் மூலோபாய உரையாடல்:**

  - இந்தியாவும் ஜப்பானும் இணைய பாதுகாப்பு ஒப்பந்தத்தை இறுதி செய்தன.

  - முக்கியமான தகவல் உள்கட்டமைப்பு பகுதிகளில் பாதுகாப்பு மற்றும் எதிர்த்தெறிதல் தவிர 5 ஜி, செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் பொருட்களை இணையத்துடன் இணைக்கும் (IOT), ஆகிய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பை இந்த ஒப்பந்தம் ஊக்குவிக்கும்.

- **மனநலம் கோவிட் - 19க்கும் அப்பால் என்ற சர்வதேச கருத்தரங்கம்:**

  - மனநலம் கோவிட் - 19 க்கும் அப்பால் என்ற சர்வதேச கருத்தரங்கத்தை மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சர் டாக்டர். தாவர் சந்த் கெலாட் மெய்நிகர் முறையில் தொடங்கி வைத்தார்.

  - ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழக்கத்துடன், மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத்துறையும்,சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகமும் இணைந்து நடத்தும் கருத்தரங்கம் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.

- **உலகப் பொருளாதார மன்றம் தனது வருடாந்திர கூட்டம் 2021-யை டாவோஸிலிருந்து லூசெர்ன் - பர்செனஸ்டாக்கு மாற்றியுள்ளது,**

    - கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக உலக பொருளாதார மன்றம் (WEF) தனது வருடாந்திர கூட்டத்தை 2021 ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்தின் டாவோலிலிருந்து லூசெர்ன் - பர்கென்ஸ்டாக்கில் மே 18 முதல் 21 2021 வரை நடத்தப்போவதாகக் கூறியுள்ளது. "தி கிரேட் ரிஸ்ட்" (The Great Reset) இந்த கூட்டத்தின் கருப்பொருள்.

- **வர்த்தகம், முதலீடு மற்றும் ஒத்துழைப்புக்கான இந்தியா – மெக்சிக்கோ இருதரப்பு உயர் மட்டக் குழு:**

    - ஜி 20 நாடுகளின் நிதி நடவடிக்கைகளுக்கான தலைவர்கள் மாநாட்டின் ஒரு பகுதியாக அக்டோபர் 11, 2020 ஆம் அன்று 4-வது ஜி 20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கி ஆளுநர்களின் கூட்டம் மெய்நிகர் முறையில் நடைபெற்றது.

    - சவூதி அரேபியா தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் இந்தியா சார்பில் மத்திய நிதி மற்றும் நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி நிர்மலா சீத்தாராமன் கலந்து கொண்டார்.

- **முதல் இந்தியா – சிலி கூட்டு ஆணையக் கூட்டம்:**
    - இந்திய – சிலி கூட்டு ஆணையக் கூட்டத்தில் இணைத் தலைவராக இந்தியச் குடியரசின் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் அவரது மேன்மை திரு. ஆண்ட்ரேஸ் சவலா, சிலி குடியரசின் வெளியுறவு அமைச்சர்.

    - வர்த்தக மற்றும் வியாபாரம், வேளாண்மை, சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு, பாதுகாப்பு, விண்வெளி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் இரு நாடுகளின் வரவுகளுக்கு புதிய வேகத்தை சேர்க்க அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

- **ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு** (SCO):

    - ஷாங்காய் கூட்டுறவு அமைப்பின் ஏழாவது நீதித்துறை அமைச்சர்களின் கூட்டம், மத்திய சட்டம் மற்றும் நீதி, தொலைத்தொடர்பு மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பம் அமைச்சர் திரு. ரவி சங்கர் பிரசாத் மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டன.

- **உலக வங்கி வளர்ச்சி குழுவின் 102 வது கூட்டம்:**

    - உலக வங்கி வளர்ச்சிக் குழுவின் 102 வது கூட்டத்தில் மத்திய நிதி மற்றும் நிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் புதுதில்லியிருந்து காணொலி காட்சி மூலம் கலந்து கொண்டார்.

- **சர்வதேச சூரியசக்தி கூட்டணியின் 3-வது கூட்டம்:**

    - மெய்நிகர் முறையில் நடந்த சர்வதேச சூரிய சக்தி கூட்டணியின் (ஐளுயு) 3-வது கூட்டத்தில் தலைவர் மற்றும் துணைத் தலைவராக இந்தியா மற்றும் பிரான்ஸ் மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டன.

# பாதுகாப்பு

- **கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சி "சூரக்ஷா கவாச்":**
    - புனேவில் உள்ள லுல்ல நகரில் இராணுவத்திற்கும் மகாராஷ்டிரா காவல் துறையினருக்கும் இடையே ஒரு கூட்டு பயங்கரவாத எதிர்ப்பு பயிற்சி "சூரக்ஷா கவாச்" (பாதுகாப்பு கவசம்) நடைபெற்றது.

- **"ஜஎன்எஸ்" சிந்துவீரா்:**
    - மியான்மர் கடற்படை, அதன் முதல் ஒரு கிலோ வகுப்பு நீர்மூழ்கிக் கப்பலான "ஜஎன்எஸ் சிந்துவீர்" யை பெற தயாராக உள்ளது. அனைத்து கடல் பங்காளிகளுக்கும் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்க மிஷன் சாகர் (SAGAR) திட்டத்தின் கீழ் இந்தியா இந்த நீர்முழ்கிக் கப்பலை ஒப்படைத்தது.

- **பிரம்மோஸ் சூப்பர்சோனிக் கப்பல் ஏவுகணை (Brahmos):**
    - நிலத்தை அடிப்படையாக கொண்ட தளங்களிலிருந்து புதிய பிரம்மோஸ் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.
    - இந்த புதிய ஏவுகணை 400 கி.மீ தூரத்தில் இருக்கும் இலக்கை துல்லியமாக அழிக்கும் திறன் கொண்டது. மேலும் இது Mach 2.8 (ஒலியை விட 3 மடங்கு வேகம்) என்ற வேகத்தில் பயணிக்கக்கூடியது.
    - நீட்டிக்கப்பட்ட நிலதாக்குதல் பிரமோஸ் ஏவுகணைகளில் இது மூன்றாவது முறை சோதனை ஆகும்.
    - சீனாவுடனான இராணுவ மோதலின் போது அசல் 290 கி.மீட்டர் தூரமுள்ள பிரம்மோஸ் ஏற்கனவே லடாக் மற்றும் அருணாச்சல பிரதேசத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.
    - இந்திய விமானப்படை சுகோய் - 30 எம்.கே.ஐ. போர் விமானங்களின் படைப்பிரிவை, பிரம்மோஸ் ஏவுகணைகளை ஏந்திச் செல்லும் திறனுடன் ஜனவரி மாதம் தனது தஞ்சாவூர் விமானத் தளத்தில் சேர்த்தது.
    - இந்தியாவின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) மற்றும் ரஷ்யாவின் பெடரல் ஸ்டேட் யூனிட்டரி எண்டர்பிரைஸ் NPO Mashinostroyenia (NPOM) இடையிலான கூட்டு முயற்சி மூலம் பிரம்மோஸ் ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது.
    - பிரம்மோஸ் என்பது ஒரு ராம்ஜெட் சூப்பர்சோனிக் கப்பல் ஏவுகணை ஆகும். மேலும் இந்த ஏவுகணை நீர்மூழ்கிக் கப்பல்கள், போர் விமானங்கள், நிலம் போன்ற தளங்களிலிருந்து ஏவப்படலாம்.
    - மேலும் பிரம்மோஸ் என்ற பெயர் இந்தியாவின் பிரம்மபுத்ரா மற்றும் ரஷ்யாவின் மோஸ்க்வா ஆகிய இரண்டு நதிகளின் பெயர்களில் இருந்து உருவானவை.

- **ஏவுகணை தொழில்நுட்ப கட்டுப்பாட்டு ஆட்சி (MTCR) - இணங்க பிரம்மோஸ் ஏவுகணையின் வரம்பு 450 – 600 கி.மீட்டர் உயர்த்தப்பட்டுள்ளது):**
    - DISC – பாதுகாப்பு இந்தியா ஸ்டார்ட் அப் சவால்

- செப்டம்பர் 29, 2020 அன்று உள்நாட்டு கண்டுபிடிப்புகளில் போர் களத்தில் இருக்கும் பாதுகாப்பு வீரர்களின் பங்களிப்பை ஊக்குவிப்பதற்காக தொடங்கப்பட்டது.

- மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் அவர்களால் IDEX4 Fauyi என்ற நிகழ்வை மெய்நிகர் மூலம் அறிமுகப்படுத்தினார். இந்திய ஆயுதப்படைகளின் உறுப்பினர்கள் இந்த செயல்முறையின் ஒரு பகுதியாக மாறி அங்கீகாரம் பெற அனுமதிக்கும் முதல் வகையான முயற்சி ஆகும்.

- **கனக்லதா பருவா:**

  - இந்திய கடலோர காவல்படை கப்பல் “கனக்லதா பருவா“வை கொல்கத்தாவில் காணொலி காட்சி மூலம் இணைக்கப்பட்டது.
  - ஐந்து அதிவேக ரோந்து கப்பல்களில் இது இறுதியான கப்பல் ஆகும்.
  - கொல்கத்தாவில் உள்ள கார்டன் ரீச் ஷிப் பில்டர்ஸ் மற்றும் இன்ஜினியர்ஸ் லிமிடெட் நிறுவனம் ICGS கனக்லதா பருவாலை வடிவமைத்துள்ளது.

- **கால்வண்ட்ஸ் ஆ.்.ப் கால்வான்:**

  - ஜுன் 15-ம் தேதி கால்வான் பள்ளத்தாக்கில் இந்திய இராணுவம் மற்றும் சீனா இராணுவம் இடையே நடந்த வன்முறை மோதலில் கொல்லப்பட்ட 20 வீரர்களுக்கு இந்திய ராணுவம் கிழக்கு லடாக்கில் ஒரு நினைவுச்சின்னம் கட்டியுள்ளது. அந்த நினைவுச் சின்னத்தில் 20 வீரர்களின் பெயர்கள் மற்றும் "Gallants of Galwan' என்று குறிப்பிட்டுள்ளது.

- **பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO):**

  - நீர்முழ்கி எதிர்ப்பு போர் திறன் கொண்ட டார்பிடோவை ஏவ உதவும் சூப்பர் சானிக் ஏவுகணையை (SMART) இந்தியா வெற்றிகரமாக சோதனை செய்தது.

  - குறைவான எடை கொண்ட எதிர்ப்பு நீர்மூழ்கி SMART பதிப்பு வழக்கமான டார்பிடோவை விட 650 km மிக அதிக தூரம் செல்லக்கூடியது.

  - உலகின் அதிக வேக நீர்மூழ்கி எதிர்ப்பு போர் திறன் (ASW) இதுவே ஆகும்.

  - ஒடிசா கடலை ஒட்டிய வீலர் தீவில் இருந்து SMART ஏவுகணையை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது.
  - முன்னதாக செப்டம்பர் 2020 மாதத்தில் லேசரால் வழிக்காட்டப்படும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது.

- **சாகர் கவாச்:**

  - கரையோர பாதுகாப்பு பொறிமுறை மற்றும் நிலையான இயக்க முறைமைகளை (SOP) சரிபார்பதற்கு கேரளா, கர்நாடகா மற்றும் லட்சத்தீவு ஆகிய கடலோரப் பகுதிகளில் 2020 அக்டோபர் 8 – 9 தேதிகளில் இரண்டு நாட்கள் நீண்ட அரை ஆண்டு கடலோர பாதுகாப்பு பயிற்சி ”சாகர் கவாச்” நடைபெற்றது.

- **“இராணுவம் - 2020”**

  - 6-வது சர்வதேச இராணுவ தொழில்நுட்ப மன்றம் “இராணுவம் - 2020” ஆகஸ்ட் 23 – 29, 2020 வரை ரஷ்யாவின் மாஸ்கோவிற்கு அருகிலுள்ள தேசபத்த பூங்காவில் நடைபெற்றது. இது ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு

சர்வதேச காங்கிரஸ் மற்றும் கண்காட்சி லிமிடெட் (ICE limited) ஆல் இயக்கப்படுகிறது.

- **பயணப் பயிற்சி (பாசெக்ஸ்)**
  - அக்டோபர் 12 ஆம் தேதி கடற்படைக் கப்பல்கள் USS ரொனால்ட் ரீகனுடன் இந்தியப் பெருங்கடல் வழியாக செல்லும் போது பாசெக்ஸ் பயிற்சியை நடத்தும் என்று தெரிவித்துள்ளது.
  - கோசி கடலை ஒட்டிய இந்த பயிற்சி நடைபெறும்.

- **கடலோர ரோந்து கப்பல் விக்ராஹா:**
  - இந்திய கடலோர காவல்படையின் ஏழு கடல் ரோந்து கப்பல்களின் தொடரில் "விக்ராஹா" கடைசியாக உள்ள கப்பல் ஆகும்.

- **விக்ராஹா:**
  - இந்த ரோந்து கப்பலை, தனியார் துறை வடிவமைத்து கட்டியது இதுவே முதல் முறை ஆகும்.
  - அக்டோபர் 6, 2020 ஆம் ஆண்டு இந்திய கடலோர காவல்படையின் ஏழாவது கடல் ரோந்து கப்பல் "விக்ராஹா" சென்னை காட்டுப்பள்ளி துறைமுகத்தில் தொடங்கப்பட்டது. இந்த கப்பலை லார்சன் & டூப்ரோ உருவாக்கியுள்ளது.

- **நிர்பாயை நில தாக்குதல் கப்பல் ஏவுகணை:**
  - இந்த சப்ஸோனிக் கப்பல் ஏவுகணை பாதுகாப்பு படையில் சேர்ப்பதற்காக 1000 km தாக்கும் வரம்பை கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

- **நிர்பயா:**
  - இந்தியாவின் உள்நாட்டில் தயாரித்த முதல் கப்பல் ஏவுகணை ஆகும். இந்த ஏவுகணையை மேம்பட்ட ஆய்வக அமைப்பு (ASL) தயாரித்துள்ளது.

- **அணுசக்தி திறன் கொண்ட பிருத்வி-2 ஏவுகணையின் வெற்றிகரமான இரவு சோதனையை இந்தியா நடத்தியது:**
  - ஒடிசாவில் பாலசோரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பில் (ITR) உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அணுசக்தி திறன் கொண்ட பிருத்வி – 2 ஏவுகணையின் வெற்றிகமரான இரவு சோதனையை இந்தியா நடத்தியது. பிருத்வி – 2 என்பது தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் குறுகிய வரம்பு பாலிஸ்டிக் ஏவுகணை ஆகும்.

- **டேங்க் எதிர்ப்பு ஏவுகணை (SANT):**
  - அக்டோபர் 19, 2020 அன்று சண்டிப்பூர் சோதனை வரம்பில் இருந்து SANT என்று பெயரிடப்பட்ட டேங்க் எதிர்ப்பு ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக சோதனை நடத்தியது. இந்த ஏவுகனையை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு (DRDO) உருவாக்கியுள்ளது.

- **மலபார் கடற்படை பயிற்சி:**
  - அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் உயர்மட்ட முத்தரப்பு மலபார் கடற்படை பயிற்சிகளில் பங்கேற்பதற்காக இந்திய இறுதியாக ஆஸ்திரேலியாவுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

- மலபாரின் 24-வது பதிப்பு நவம்பர் முதல் மற்றும் மூன்றாவது வாரங்களில் வங்காள விரிகுடா மற்றும் அரேபிய கடலில் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது.
- 13 வருட இடைவெளிக்குப் பிறகு உயர் கடல்களில் போர் சூழ்ச்சிகளுக்காக “குவாட்“ (Quad) நாடுகள் ஒன்றிணைவது இதுவே முதல் தடவையாகும்.

- **டேங்க் எதிர்ப்பு ஏவுகணை (ATGM) 'NAG':**

  - அக்டோபர் 22 ஆம் தேதி அன்று உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட டேங்க் எதிர்ப்பு ஏவுகணை 'NAG' – யின் இறுதி பரிசோதனை பொக்ரான் பகுதியில் வெற்றிகரமாக நடைபெற்றது.
  - “நெருப்பு மற்றும் மறத்தி“ திறன் கொண்ட இந்த மூன்றாம் தலைமுறை ATGM 4 km தாக்கும் வரம்பை கொண்டது.

- **INS கவராட்டி : (INS Kavarattti)**

  - விசாகப்பட்டினத்தின் கிழக்கு கடற்படைத் தளத்தில் INS கவராட்டி போர்க்கப்பலை இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டன.

- **பெண் விமானிகளின் முதல் அணியை கடற்படை இணைத்து கொண்டது.**

  - இந்திய கடற்படையின் முதல் பெண் விமானிகளின் அணியை தெற்கு கடற்படை தளத்தால் இணைத்துக் கொள்ளப்பட்டது.

லெப்டினெண்ட் திவ்யா சர்மா (புதுதில்லி)
லெப்டினெண்ட் சுபாங்கி சுவளுப் (உத்திபிரதேசம்)
லெப்டினெண்ட் ஷிவாங்கி (பிகார்)

ஆகியோர் முதல் அணியில் உள்ள மூன்று விமானிகள் ஆவர்.

- **கூட்டு பயிற்சி “பாங்கோசாகர்”**
  - இந்தியா – வங்கதேச கடற்படைகளின் 2வது கூட்டு பயிற்சி பாங்கோசாகர் நடைபெற்றது.
  - இந்த பயிற்சி வங்காள விரிகுடாவில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து அதே இடத்தில் அக்டோபர் 4 மற்றும் 5ம் தேதிகளில் IN-BN கூட்டு ரோந்து பயிற்சியின் (CORPAT) 3வது பதிப்பு நடைபெற்றது.

- **ஸ்லிநெக்ஸ் - 2020:**

  - இந்தியா - இலங்கை கடற்படைகளுக்கு இடையே “ஸ்லிநெக்ஸ் - 20“ என்ற பெயரில் இருதரப்பு கூட்டு பயிற்சி நடைபெற்றது.
  - கோவிட் - 19 பின்னணியில் நேரடியாக தொடர்பு கொள்ளமால் நடுக் கடலில் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.

- **சுக்ரயான் - 1:**
  - விண்வெளி ஆய்வு களத்தில், இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பின் (ISRO) ஆஸ்ட்ரோசாட், மங்கல்யான் சந்திரயான் - 1 மற்றும் சந்திரயான் - 2 ஆகியவற்றுடன் வரவு பெற்றுள்ளது.

  - இப்போது முன்னோக்கி நகர்ந்து, ISRO தனது முதல் வீனஸ் மிஷனின் “சுக்ரயான் - 1 யை 2025 ஆம் ஆண்டில் பிரெஞ்சு விண்வெளி நிறுவனமான CNES – வுடன் (விண்வெளி ஆய்வுகளுக்கான தேசிய மையம், பிரெஞ்சு : தேசிய மையம் “டிடுட்ஸ் ஸ்பேடியேல்ஸ்) பங்கேற்று தொடங்க உள்ளது.

- இது தொடர்பாக ISRO ரஷியாவின் மத்திய விண்வெளி நிறுவனமான Roscosmos - யுடன் இணைந்து தயாரித்த VIRAL (வீனஸ் அகச்சிவப்பு வளிமண்டல வாயுக்கள் லிங்கர்) மற்றும் LATMOS – யை (வளிமண்டலம், Milieux, ஆராய்த்தல், Spatiales ஆய்வுக்கூடம்) தேர்ந்தெடுத்துள்ளது.
- இந்திய ஆய்வுப் பணியில் பிரெஞ்சு பேலோட் பறக்கப்படுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.
- பிரான்சைத் தவிர, ஸ்வீடிஷ் விண்வெளி இயற்பியல் நிறுவனம் இந்த மிஷனில் பங்கேற்கிறது.
- வீனஸ் நியூட்ரல்ஸ் அனலைசர் (VNA) என்ற சுக்ராயன் - 1 னின் செயற்கைக்கோள் கருவியை பயன்படுத்தி இரண்டாம் முறையாக வீனசை ஆராயலாம்.
- 2020 செப்டம்பர் 30 அன்று ISRO தலைவர் (கைலாசவாதிவூ (கே) சிவன்) மற்றும் பிரான்சின் CNES தலைவர் ஜீன் - யவ்ஸ்லுகால் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் போது வீனஸ் மிஷன் குறித்த ஒருங்கிணைப்பு முடிவு எடுக்கப்பட்டது.
- கார்பன் டை ஆக்சைடு, $CO_2$, கொண்டுள்ள அடர்த்தியான மற்றும் வெப்ப மிகுந்த வீன்ஸின் வளிமண்டலத்தை ஆய்வு செய்வதுதான் சுக்ரயான் - 1 இன் நோக்கமாகும்.
- இந்த மிஷன் வீன்ஸ் கிரகத்தின் இயக்கவியல், இயையு மாறுபாடு மற்றும் வளிமண்டலத்தின் வேதியியல் ஆகியவற்றை ஆய்வு செய்யும்.

- **அணு திறனுள்ள தரையிலிருந்து கரைக்கு ஏவப்படும் ஏவுகணை, "சௌர்யா"**

  - வங்காள விரிகுடா இலக்கை ஒடிசாவில் உள்ள அப்துல்கலாம் தீவு சோதனை வரம்பில் இருந்து பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (DRDO) நிறுவனம் வெற்றிகரமாக உள்நாட்டிலேயே தயாரித்த மிக அதிவேக அணு திறனுள்ள சௌர்யா ஏவுகணையின் புதிய பதிப்பை சோதனை நடத்தியது.

  - சௌர்யா, தரையிலிருந்து தரைக்கு ஏவப்படும் ஏவுகணை, நீர்மூழ்கி கப்பல் ஏவுகணையின் நில பதிப்பு ஆதலால் கடற்படை மற்றும் ராணுவ படைக்கு பயன்படுத்தலாம்.

- **மேம்படுத்தப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணை - ரூத்ரம்:**

  - ஒடிஷா கடற்பகுதியிலிருந்து SU-30 MKI போர் விமானத்தின் மூலம் உள்நாட்டிலேயே தயாரித்த மேம்படுத்தப்பட்ட கதிர்வீச்சு எதிர்ப்பு ஏவுகணையின் (ருத்ரம்) சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.
  - இந்த ஏவுகணையை DRDO நிறுவனம் தயாரித்து உள்ளது.
  - இந்த ஏவுகணையின் மூலம் வெகு தொலைவிலிருந்தே எதிரி நாடுகளின் ரேடார்கள், ட்ராக்கிங் மற்றும் தகவல் தொடர்பை அழிக்க முடியும்.

- **இந்திய கடற்படை போர்க்கப்பல் INS கோரா வங்காள விரிகுடாவில் எதிர்ப்பு கப்பல் ஏவுகணையை சோதனை செய்தது**

  - இந்திய கடற்படையின் வழிகாட்டப்பட்ட ஏவுகணை கொர்வெட் RNS கோரா (இந்திய கடற்படைக் கப்பல்) வங்காள விரிகுடாவில் எதிர்ப்பு கப்பல் ஏவுகணையை சோதனை செய்தது.
  - இந்த ஏவுகணை அதிகபட்ச வரம்பில் உள்ள இலக்கை துல்லியத்துடன் வெற்றிகரமாக தாக்கியது.

# மசோதாக்கள் / சட்டங்கள்

- நாடாளுமன்றம் ஊதிய மசோதா, 2019ஐ நிறைவேற்றியது.
- நடுத்தர மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களை பணியில் அமர்த்துவதற்காகவும் பணியில் இருந்து நீக்குவதறகாகவும் இதற்கு முன்னதாக இருந்த – தொழிற்சங்கங்கள் சட்டம், 1926, தொழில்துறை வேலைவாய்ப்பு (நிலையான ஆணைகள்) சட்டம், 1946, மற்றும் தொழில்துறை தகராறுகள் சட்டம், 1947 ஆகி மூன்று சட்டங்களை ஒருங்கிணைத்து இந்த புதிய சட்டம் இயற்றப்பட்டது.
- 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட நிறுவனங்கள் இப்போதும்கூட அங்கீகாரம் வேண்டி விண்ணப்பம் செய்ய வேண்டும். இருப்பினும் அவர்களுடைய கோரிக்கைகளை அதிகாரிகள் பரிசீலிக்கவில்லையென்றால் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- 100 அல்லது அதற்கும் அதிகமான தொழிலாளர்களைக் கொண்ட உற்பத்தி அலகுகள், தோட்டத் தொழில்கள் மற்றும் சுரங்கங்களைப் பொறுத்தமட்டில், பணிநீக்கம் செய்வதற்குக் கூட அரசின் அனுமதியைப் பெற வேண்டும்.

**<u>தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டம், 2020:</u>**

- இது முந்தைய பழைய 13 மத்திய தொழிலாளர் சட்டங்களுக்குப் பதிலாக மாற்றி அமைக்கப்பட்ட தொழிலாளர்களின் தொழில் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணிநிலைமைகளை முறைப்படுத்துவதற்கான சட்டமாகும்.
- இது அதிக பொருளாதார நடவடிக்கைகளையும் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குவதற்காக எந்த ஒரு புதிய தொழிற்சாலைக்கும் சட்டத்தின் விதிமுறைகளிலிருந்து விலக்கு அளிக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- இது தினசரி அதிகபட்ச வேலை நேரத்தை எட்டு மணி நேரமாக நிர்ணயம் செய்கிறது.
- அபாயகரமான தொழில்கள் எனில் போதிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதின்மூலம், பெண்கள் அனைத்து வகையான தொழில்களிலும் நியமனம் செய்யப்படுவதற்கு இது வழிவகை செய்கிறது.

**<u>சமூக பாதுகாப்பு விதிகள், 2020:</u>**

- இந்த விதிகள் ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் முறைசாரா தொழிலாளர்கள், குதிரை வண்டிக்காரர்கள் மற்றும் நடைபாதை தொழிலாளர்களுக்கு முதன்முறையாக உலகளாவிய மற்றும் சமூக பாதுகாப்பை வழங்குவதற்காக 9 சட்டங்களுக்குப் பதிலாக இயற்றப்பட்டது.
- இந்தச் சட்டத்தின்படி, வருங்காலத்தில் வருங்கால வைப்பு நிதி, வேலையின்போது ஏற்படும் காயங்களுக்கு இழப்பீடு, வீட்டு வசதி, குழந்தைகளுக்கான கல்வித் திட்டங்கள். தொழிலாளர்களின் திறன் மேம்பாடு, இறுதிச் சடங்குகள் மற்றும் முதியோர் இல்லங்கள் உள்ளிட்ட பொருத்தமான திட்டங்களை அரசாங்கம் உருவாக்கி அறிவிக்கும்.
- இது அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பொருத்தமான திட்டங்களை மத்திய அரசுக்குப் பரிந்துரைப்பதற்காக தேசிய சமூக பாதுகாப்பு வாரியம் அமைப்பதற்கும் வழிவகை செய்கிறது.

**<u>ஊதியங்கள் சட்டம், 2019:</u>**

- இது நான்கு சட்டங்களை ஒன்றாக்கி எளிமையாக்குகிறது. அவை: ஊதியம் வழங்கல் சட்டம், 1936, குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948, போனஸ் வழங்கல் சட்டம், 1965 மற்றும் சம ஊதியச் சட்டம், 1976. முந்தைய நான்கு சட்டங்களில் மொத்தம் 119 பிரிவுகள் இருந்தன. அதே சமயம் இந்தப் புதிய சட்டத்தில் 69 பிரிவுகள்உள்ளன.
- இது குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதற்கும், சரியான நேரத்தில் ஊதியம் வழங்குவதற்கும் சட்ட ரீதியான பாதுகாப்பை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.

**கம்பெனிகள் சட்டத்தின் திருத்தங்களுக்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்துள்ளது:**

- நாட்டில் வணிகத்தை எளிதாக்குவதை ஊக்குவிக்க முயலும் கம்பெனிகள் (திருத்த) மசோதா, 2020க்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. இந்த கம்பெனிகள் (திருத்த) சட்டம், 2020 முந்தைய கம்பெனிகள் சட்டம், 2013க்கு பதிலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.
- இந்த மசோதா கம்பெனிகள் சட்டம், 2013ன் 61 பிரிவுகளுக்கான திருத்தம் உட்பட, 65 உட்பிரிவுகளில் திருத்தத்தை ஏற்படுத்துகிறது. உற்பத்தியாளர் நிறுவனம் பற்றிய ஒரு புதிய அத்தியாயமும்கூட இந்தச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.
- பல்வேறு குற்றங்களைத் தீர்த்தல், சில குற்றங்களுக்கு அபராதங்களைக் குறைத்தல் மற்றும் சரியான பிரச்சினைகளுக்கு குறித்த நேரத்தில் தீர்வு காணுதல், பெருநிறுவன சமூக பொறுப்புடைமை இணக்கத் தேவைப்பாடுகளில் தளர்வு மற்றும் தேசிய நிறுவன சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தில் தனி இருக்கைகளை உருவாக்குதல் ஆகியவையும் இந்த திருத்தங்களில் அடங்கும்.

**அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2020**

- 1976 முதல், அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், அத்தகைய பங்களிப்புகள் உள்நாட்டுப் பாதுகாப்பை கடுமையாகப் பாதிக்கவில்லை என்பதை உறுதி செய்வதற்காக அன்னிய நன்கொடைகளை முறைப்படுத்தி வருகின்றது.
- இந்தச் சட்டம் 2010ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.
- இந்தச் சட்டம் அன்னிய நன்கொடைகளை ஏற்றுக் கொள்ள விரும்பும் அனைத்து சங்கங்கள், குழுக்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஆகிய அனைத்திற்கும் பொருந்தும். இவ்வாறாக, இந்தச் சட்டம், அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டத்தின்கீழ், அவை பதிவு செய்யப்படுவதைக் கட்டாயமாக்குகிறது.
- இது அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) திருத்தச் சட்டம், 2020ன்கீழ் மாற்றப்படுகிறது.

**ஆதார் கட்டாயம்:**

- பதிவு செய்வதற்கு அரசு சாரா அமைப்பில் பொறுப்பில் உள்ளவர்களின் ஆதார் எண் கட்டாயமாகும்.
- ஒரு அன்னியர் எனில், கடவுச் சீட்டு அல்லது இந்திய சர்வதேச குடிமகன் என்பதற்கான அட்டை நகல் தேவைப்படுகிறது.
- **நிர்வாகச் செலவின மூலதனத்தில் குறைவு:** அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின் பிரிவு 8ஐ திருத்துவதன்மூலம், எந்த ஒரு நிறுவனமும் அன்னிய நிதியுதவியைப் பெறுவதாக இருந்தால், அதன் நிர்வாகச் செலவினங்களை தற்போதுள்ள ஆண்டு நிதியில் 50 விழுக்காடு என்பதிலிருந்து 20 விழுக்காடாக இந்தச் சட்டம் குறைத்துள்ளது.
- அரசு ஊழியர்கள் அயல் நாடுகளிலிருந்து நிதியுதவி பெறுவதைத் தடை செய்கிறது.
- அன்னிய பங்களிப்பை பரிமாற்றம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- அன்னிய பங்களிப்பு பெறுநரை அதன் நிதியைப் பயன்படுத்துவதில் ∴ பெறுவதிலிருந்து தடை செய்துள்ளது.
- **அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின்கீழ், டெல்லி பாரத ஸ்டேட் வங்கியில் கணக்கு வைத்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது:** அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின் பிரிவு 17ன் திருத்தத்தின்கீழ், அன்னிய பங்களிப்புகளை புது டெல்லியில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியின் கிளையில் திறக்கப்படும் அன்னிய பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்ட கணக்கின்மூலம் மட்டுமே பெற முடியும்.

**புதிய தொழிலாளர் சட்டங்கள் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டன.**

- இதில் அடங்கியுள்ள மூன்று மசோதாக்கள் - தொழில்துறை உறவுகள் சட்டம், 2020, தொல்துறை பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் சட்டம், 2020 மற்றும் சமூக பாதுகாப்பு சட்டம், 2020.
- இந்த மசோதாக்கள் அரசின் தொழிலாளர் சீர்திருத்த நிரல்களின் பகுதி ஆகும்.
- அதற்கேற்ப, தற்போதுள்ள அனைத்து தொழிலாளர் சட்டங்களும், நான்கு சட்டங்களின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன – ஊதியம், தொழில்துறை உறவுகள், சமூக பாதுகாப்பு மற்றும் பாதுகாவல், சுகாதாரம் மற்றும் பணி நிலைமைகள் தொடர்பானவை.

APOLLO STUDY CENTRE

# பொருளாதாரம்

**பெங்களூர் சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஹைப்பர்லூப் காரிடர்கள்.**

- பெங்களுரு கெம்பகவுடா சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஹைப்பர்லூப் காரிடர் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிய ஒரு ஆய்வை மேற்கொள்வதற்காக, பெங்களூர் சர்வதேச விமான நிலையமும், வர்ஜின் ஹைப்பர்லூர் நிறுவனமும் இந்த வகையிலேயே முதலாவதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

**<u>"WASH" தொடர்பாக ஒரு கற்றல் பிரச்சாரத்தை மேம்படுத்துவதற்காக, நபார்டு வங்கி, துப்புரவு கற்றல் பிரச்சாரத்தை மேற்கொள்ள உள்ளது.</u>**

- வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு), நாடு முழுவதிலும் உள்ள ஒரு இலட்சம் கிராமப்புற மக்களுக்காக 2.000 கிராமங்களில் "WASH" (Water, Sanitation and Hygiene – தண்ணீர், துப்புரவு மற்றும் சுகாதாரம்) தொடர்பாக ஒரு கற்றலை மேம்படுத்துவதற்காக, ஒரு துப்புரவு கற்றல் பிரச்சாரத்தை மேற்கொள்ளவுள்ளது. இந்த துப்புரவு கற்றல் பிரச்சாரம் அக்டோபர் 2, 2020 முதல் ஜனவரி 26, 2021 வரை நடத்தப்படும்.

APOLLO STUDY CENTRE

# விளையாட்டுகள்

**பிரான்சிஸ் ஹாக்கி மைதானம்**

- இது மேயர் ராதாகிருஷ்ணன் விளையாட்டு மைதானத்திற்குள் அமைந்துள்ளது. முன்னாள் இந்திய கோல் கீப்பர் பிரான்சிஸ் ரங்கநாதனைக் கௌரவிப்பதற்காக இந்தப் புதிய பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**5,000 மீட்டர் மற்றும் 10,000 மீட்டர் போட்டிகளில் புதிய உலக சாதனைகள்**

- **செப்டிகெய் (Cheptegei),** ஆடவர் 10,000 மீட்டர் தூரத்தை 26 நிமிடம் 11 வினாடிகளில் கடந்து உலக சாதனையைப் படைத்தார்.
- மொனாகோவின் டயமண்ட் லீகில் பெக்கெல் நிகழ்த்தியிருந்த 5000 மீட்டர் உலக சாதனையை செப்டிகெய் ஆகஸ்ட்டில் முறியடித்தார்.

**பிரெஞ்ச் ஓபன்**

- 19 வயதான போலிஷ் வீராங்கனை ஈகா ஸ்வியாடெக் (**IgaSwiatek**) – பிரெஞ்ச் ஓபன் போட்டியையும் தன்னுடைய முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தையும் வென்றார்.

**ரோலண்ட் கரோசில் (Roland Garros) நடைபெற்ற பிரெஞ்ச் ஓபன் ஆடவர் பட்டம்**

- 34 வயதான ரபேல் நடால் (ஸ்பெயின்) – பாரிசின் ரோலண்ட் கரோசில் நடைபெற்ற போட்டியில் முதல்நிலை ஆட்டக்காரராகிய நொவாக் ஜொகோவிச்சை நேரடியாகத் தோற்கடித்து தன்னுடைய 13வது பிரெஞ்ச் ஓபன் ஆடவர் பட்டத்தை வென்றார்.

**பிரெஞ்ச் ஓபன் 2020**

- பிரெஞ்ச் ஓபன் (ரோலன்ட் கரோஸ் என்றும் அழைக்கப்படுகிறது) போட்டிகளின் 124வது பதிப்பு பாரிசில் உள்ள ரோலன்ட் கரோஸ் மைதானத்தில் நடைபெற்றது.
- பிரெஞ்ச் ஓபன் என்பது கிளே கோர்ட் டென்னிஸ் போட்டி ஆகும்.

**பிரெஞ்ச் ஓபன் 2020 வெற்றியாளர்கள்:**

| பிரிவு | வெற்றியாளர் | இரண்டாவது வெற்றியாளர் |
|---|---|---|
| ஆடவர் ஒற்றையர் | ரபேல் நடால் (ஸ்பெயின்) | நொவக் ஜொகோவிச் (செர்பியா) |
| மகளிர் ஒற்றையர் | ஈகா ஸ்வியாடெக் (போலந்து) | சோபியா கெனின் (அமெரிக்கா) |
| ஆடவர் இரட்டையர் | கெவின் கிராவியெட்ஸ்(ஜெர்மனி), ஆன்டிரியாஸ் மியஸ் (ஜெர்மனி) | மேட் பவிக் (குரோவேசியா), புருனோ சோரஸ் (பிரேசில்) |
| | | |

| | | |
|---|---|---|
| மகளிர் இரட்டையர் | டைமியா பபோஸ் (ஹங்கேரி), கிறிஸ்டினா மிளடெனோவிக் (பிரான்ஸ்) | அலெக்சா கௌராச்சி (சிலி), டிசைரே கிராசிக் (அமெரிக்கா) |

**<u>செஸ்.காமின் (Chess.com) 2020 ஜுனியர் ஸ்பீட் ஆன்லைன் சாம்பியன்ஷிப் போட்டிகளில் நிஹால் சரின் வெற்றிபெற்றார்.</u>**

- பதினாறு வயதான இந்திய செஸ் விளையாட்டு வீரர் நிஹால் சரின் செஸ்.காம்-ன் 2020 ஜுனியர் ஸ்பீட் ஆன்லைன் செஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெற்றி பெற்றார். அவர் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் அலெக்சி சரானாவைத் தோற்கடித்தார்.

**<u>சர்வதேச ஏர்-ரைபிள் சாம்பியன்ஷிப் 2020</u>**

- மெய்நிகராக ஷேக் ரஸ்ஸல் சர்வதேச ஏர் ரைபிள் சாம்பியன்ஷிப் 2020 ல் நடைபெற்ற மகளிர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்திய வீராங்கனை எலாவெனில் வளரிவன் தங்கப் பதக்கத்தை வென்றார், அதே போல, ஆடவர் துப்பாக்கி சுடும் போட்டியில் ஷாஹு துஷார் மானே வெள்ளிப் பதக்கம் வென்றார்.

**<u>கிர்கிஸ்தானில் நடைபெற்ற ஆன்லைன் ஆசிய செஸ் போட்டிகளில் ஆர் வைஷாலி தங்கம் வென்றார்.</u>**

# விருதுகள்

- **ஐக்கிய நாடுகள் அமைப்பின் வளர்ச்சித் திட்டத்தின்** (United Nations Development Programme) **SDG சிறப்பு மனிதாபிமான செயலுக்கான விருது (Special Humanitarian Action Award) –** சோனு சூட்டுக்கு வழங்கப்பட்டது.

**சோனு சூட்**

- ஊர் முடக்கக் (lockdown) காலத்தில் பல்லாயிரக் கணக்கான இடம் பெயரும் தொழிலாளர்கள் தங்கள் சொந்த ஊர்களுக்குச் செல்வதற்கு சோனு சூட் உதவி செய்தார்.
- சோனு சூட் மற்றும் எஸ்பிஎஸ் ஓபராய் ஆகியோரின் செயல்களுக்காக சிறப்பு மனிதாபிமான செயலுக்கான விருது 2020 வழங்கப்பட்டது.

**மகாத்மா காந்தி தேசிய ஃபெலோஷிப்பின் காந்தி விருதுக்கு சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.**

- மால்கா மதுபானம் என்ற ஒரு இஸ்ரேலி தனியார் நிறுவனத்தின் பீர் பாட்டில்களில் இடம் பெற்றிருந்த மகாத்மா காந்தியின் படத்தை அகற்றுவதில் இந்தியாவின் தூதரக ரீதியான முயற்சிக்கு அவர் முக்கிய பங்காற்றியமையால், அவர் இந்த விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

**சரியான வாழ்வாதார விருதுகள் (Right Livelihood Awards)**

- சமத்துவம், ஜனநாயகம், நீதி மற்றும் சுதந்திரம் ஆகிய பொருட்களில் தாங்கள் ஆற்றிய பங்களிப்புக்காக 2020ஆம் ஆண்டுக்கான விருதை பெலாரசைச் சேர்ந்த ஆலஸ் பியாலியட்ஸ்கி, ஈரானைச் சேர்ந்த நஸ்ரின் சோடௌடியே, அமெரிக்காவின் பிரையன் ஸ்டீவன்சன் மற்றும் நிகாரகுவாவைச் சேர்ந்த லேட்டீ கன்னிங்ஹாம் ரென் ஆகிய நான்கு பேர் பகிர்ந்து கொண்டனர்.

**கோவிட் பாதுகாவலர் விருது (Covid Crusader Award) - 2020**

- இந்தோ அமெரிக்கன் சேம்பர் ஆப் காமர்ஸ் அமைப்பினால் தோற்றுவிக்கப்பட்ட 'கோவிட் பாதுகாவலர்-2020' விருது, மகாராஷ்டிரா மாநிலம், பெருநகர மும்பை மாநகராட்சியின் நகராட்சி ஆணையர் இக்பால் சிங் சாஹல் (ஐ.எஸ். சாஹல்) என்பவருக்கு வழங்கப்பட்டது.
- இதன்மூலம் உலக அளவிலான இந்த அங்கீகாரத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட முதலாவது இந்திய அதிகாரி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

**நீலக் கொடி (Blue Flag) சான்றளிப்பு**

- **எட்டு இந்திய கடற்கரைகள்** - பெருமைக்குரிய இந்த 'நீலக் கொடி' சான்றினைப் பெற்றுள்ளன. இந்த விருது தூய்மையான, பாதுகாப்பான மற்றும் சுற்றுச் சூழல்நட்பு, மெரினாக்கள் மற்றும் நீடித்த படகு சுற்றுலா செயல்பாடு ஆகியவற்றை செயல்படுத்தும் சிறந்த கடற்கரைகளுக்கு வழங்கப்படும் உலகின் பெருமைக்குரிய விருதுகளில் ஒன்றாகும்.
- சர்வதேச அளவிலான சுற்றுச் சூழல் நிலை அடையாளத்தைப் பெறும் இந்த எட்டு கடற்கரைகள் ஷிவ்ராஜ்பூர் கடற்கரை (துவாரகா, குஜராத்), கோக்லா (டையூ), காசர்கோட் மற்றும் பதுபித்ரி (கர்நாடகா). கப்பட் (கேரளா). ருஷிகொண்டா (ஆந்திரப் பிரதேசம்),

தங்கக் கடற்கரை (பூரி, ஒடிசா) மற்றும் ராதாநகர் கடற்கரை (அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்)

- நீலக் கொடி கடற்கரைகள் உலகின் மிகவும் தூய்மையான கடற்கரைகள் என்று கருதப்படுகின்றன.

**காலநிலை மாற்றத்தை ஆதரரிப்பதற்கான ஒரு சுற்றுச் சூழல் விருது 'தி எர்த்ஷாட் பரிசு (The Earthshot Prize)**

- அடுத்த 10 ஆண்டுகளில் (2030) இந்தக் கோளைச் சரி செய்து மாற்றியமைப்பதை ஊக்குவிப்பதற்காக, எர்த்ஷாட் பரிசு என்ற ஒரு புதிய சுற்றுச் சூழல் விருதை இங்கிலாந்து இளவரசர் வில்லியம், கேம்பிரிட்ஜ் டியூக் ஆகியோர் பிராட்காஸ்டர் மற்றும் இயற்கை ஆர்வலர் சர் டேவிட் அட்டன்பரோ என்பவருடன் இணைந்து தோற்றுவித்துள்ளனர்.

**கடற்படையில் சிறந்த கப்பல்கள் விருது வழங்கும் விழா**

- மூலதனக் கப்பல்கள் மற்றும் கோர்வெட்டுகள் மற்றும் அதைப் போன்ற கப்பல்கள் பிரிவில் சிறந்த கப்பல்களுக்கான கோப்பைகளை முறையே இந்திய கடற்கடை கப்பல் (ஐஎன்எஸ்) சஹ்யாத்ரி மற்றும் ஐஎன்எஸ் கோரா ஆகியவை பெற்றுள்ளன.

**கல்பனா சாவ்லா விருதுகள்**

- இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்ட, அமெரிக்க விண்வெளி வீராங்கனை பெயரில் தோற்றுவிக்கப்பட்ட கல்பனா சாவ்லா விருதுகளை அரியானா முதலமைச்சர் மனோகர் லால் கட்டார், ஐஐடி டெல்லியின் டாக்டர் பீம் சிங், ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த துபாய் மின்சார மற்றும் தண்ணீர் ஆணையத்தின் டாக்டர். ஆயிஷா ஆல்நுயாமி அகியோருக்கு வழங்கினார்.

**இந்த ஆண்டின் சிறந்த சிஇஓ மற்றும் தொலைநோக்கு தலைவர் விருது (CEO of the Year and Visionary Leadership award)**

- இந்திய பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் மேம்பாட்டு கூட்டமைப்பின் (Tribal Cooperative Marketing Development Federation of India) நிர்வாக இயக்குநர் பிரவீர் கிருஷ்ணா.

**ப்ருநெல் பதக்கம்**

- பூட்டானில் உள்ள பூட்டான்-இந்தியா நட்பு திட்டமான இந்திய உதவியுடன்கூடிய மங்தேச்சு நீர் மின் திட்டம், இங்கிலாந்து அடிப்படையிலான ஐசிஇ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஆண்டு சிவில் பொறியாளர்கள் விருதுகள் 2020ல், சிறந்த சிவில் எஞ்சினியர்களுக்கான 2020 புருநெல் பத்தகத்தை வென்றது.

**ஸ்காச் விருது சென்னை பெருநகர நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் எலக்ட்ஸ் விருது தமிழ்நாடு நீர்வழங்கல் மற்றும் வடிகால் வாரியத்திற்கும் வழங்கப்பட்டன.**

- 'தண்ணீர் தேவைக்கு அழைக்கவும் 2.0' (Dial for Water 2.0 Scheme) திட்டத்தை அறிமுகப்படுத்தியதற்காக ஸ்காச் தங்க விருது சென்னை பெருநகர நீர்வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு வழங்கப்பட்டது.
- மாநிலத்தில் உள்ள குவாரிகளை மழைநீர் சேகரிப்பு மையங்களாக மாற்றியதற்காக புதுமையான மழைநீர் சேகரிப்புப் பிரிவின்கீழ் எலெட்ஸ் தேசிய கண்டுபிடிப்பு உச்சி மாநாட்டில், 2020ஆம் ஆண்டு தேசிய நீர் கண்டுபிடிப்பு விருதுக்கு தமிழ்நாடு நீர்வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

# புத்தகங்களும் ஆசிரியர்களும்

| புத்தகம் / புதினம் | ஆசிரியர் |
|---|---|
| "The Battle of Belonging" (சொந்தத்திற்கான போர்) | சசி தரூர் |
| "On the Trails of Buddha: A Journey to the East" (புத்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி: கிழக்கை நோக்கிய ஒரு பயணம்) | தீபங்கர் ஆரொன் |
| "Portraits of Power : Half a Century of Being at Ringside" (அதிகாரத்தின் உருவப்படங்கள்: ரிங்சைடில் அரை நூற்றாண்ட இருப்பது) | என்.கே. சிங் |
| Night of the Restless Spirits : Stories from 1984 (அமைதியற்ற ஆவிகளின் இரவு: 1984 முதல் கதைகள்) | சர்ப்பிரீட் சிங் |

# இரங்கல் செய்திகள்

**சாகித்ய அகாடமி விருது பெற்ற ஜி.எஸ். அமுர்**

- இவர் பழம்பெரும் கன்னட எழுத்தாளரும், கன்னடா மற்றும் ஆங்கில இலக்கியத்தில் புகழ்பெற்ற விமர்சகரும் ஆவார்.

**விங் கமாண்டர் விஜயலக்ஷ்மி ரமணன்**

- இந்திய விமானப் படையின் முதலாவது பெண் அதிகாரி – வயது மூப்பு அடிப்படையிலான காரணங்களால் அக்டோபர் 18 அன்று காலமானார்.

# செயலிகளும் போர்ட்டல்களும

| | |
|---|---|
| ஸ்கேல் இந்தியா கைபேசி செயலி | தோல்துறை திறன் கவுன்சில் (Leather Sector Skill Council) என்ற ஒரு இலாப நோக்கற்ற அமைப்பு தோல் தொழிலின் தர உறுதியை மேம்படுத்துவதற்காக ‘இந்திய தோல்துறை ஊழியர்களுக்கான திறன் மதிப்பீடு சான்றிதழ்’ (SCALE India) ஆன்டிராய்டு செயலியை தொடங்கி வைத்துள்ளது. |

# அட்டவணை, தரவரிசை மற்றும் அறிக்கைகள்

**உலகளாவிய பசி அட்டவணை (Global Hunger Index)**

- இந்தியா – உலகளாவிய பசி அட்டவணை 2020ல் இடம்பெற்றுள்ள 107 நாடுகளில் 94வது இடத்தில் உள்ளது. இது 27.2 புள்ளிகளுடன் பசி அட்டவணையில் ‘மிகவும் மோசமான’ நிலையில் தொடர்ந்து இருப்பதை உணர்த்துகிறது.
- இந்த உலகளாவிய பசி அட்டவணை நான்கு குறிகாட்டிகளின் செயல்திறன் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது – ஊட்டச்சத்து குறைபாடுள்ள மக்கள்தொகையின் விழுக்காடு, வீணாதல் மற்றும் வளர்ச்சி குறைபாடுகளால் பாதிக்கப்படும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் விழுக்காடு, மற்றும் குழந்தைகள் இறப்பு வீதம்.
- அக்டோபர் 16 அன்று வெளியிடப்பட்ட இந்த அட்டவணையானது, கன்சர்ன் வேர்ல்டுவைட் மற்றும் வெல்துங்கர்ஹில்ப் (Concern Worldwide and Welthungerhilfe) அமைப்பால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் சக மதிப்பாய்வு அறிக்கை ஆகும்.
- 2019ஆம் ஆண்டில், மொத்தம் உள்ள 117 நாடுகளில் இந்தியா 102வது இடத்தில் இருந்தது. 2018ஆம் ஆண்டில், மொத்தம் உள்ள 119 நாடுகளில் இந்தியா 103வது இடத்தில் இருந்தது.

**பெருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்புக்கான (Organisation for Economic Co-operation and Development) இடப்பெயர்ச்சியில் இந்தியா உலக அளவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.**

- சீனா முதலிடத்தில் உள்ளது: பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாட்டுக்கான அமைப்பின் 44வது சர்வதேச இடம்பெயர்வு அவுட்லுக் 2020ல் சீனா முதலிடம் வகிக்கிறது.

**அர்ட்டான் கேபிடல்சின் பாஸ்போர்ட் அட்டவணை 2020ன்படி இந்தியா 58வது இடத்தில் உள்ளது.**

- ஒரு வலிமையான பாஸ்போர்ட் என்பது, ஒரு குறிப்பிட்ட நாட்டின் பாஸ்போர்ட்டை வைத்திருக்கும் ஒரு நபர் அதிகப்படியான எண்ணிக்கை நாடுகளால் பெரிதும் வரவேற்கப்படுகிறார் என்பதைக் குறிக்கும்.

**UN-IGNME Launched 1st Report on Stillbirths**

- முதன்முறையாக ‘ஒரு புறக்கணிக்கப்பட்ட சோகம்: உலகளாவிய பிறக்கப்போகும் குழந்தைகளின் சோகம்’ என்ற தலைப்பில் பிறக்கப்போகும் குழந்தைகளைப் பற்றிய ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையை குழந்தை இறப்பு மதிப்பீட்டிற்கான ஐ.நா முகமைகளுக்கிடையிலான குழுவால் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் குழுவை ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யூனிசெப்), உலக சுகாதார நிறுவனம், உலக

வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறையின் மக்கள் தொகை பிரிவு ஆகியவை ஏற்படுத்தின.

**அட்டல் சுரங்கப்பாதை**

- பிரதமர் நரேந்திர மோடி – உலகின் மிக நீளமான நெடுஞ்சாலை சுரங்கப்பாதையாகிய அட்டல் சுரங்கப்பாதையை, ரோஹ்டங்கில் தொடங்கி வைக்கிறார்.
- 9.02 கிமீ நீளமுள்ள இந்த சுரங்கப்பாதையானது பூமியிலிருந்து 3000 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது.
- இந்த சுரங்கப்பாதையானது இமாசலப் பிரதேசத்தில் உள்ள மனாலியையும், ஸ்பிட்டி பள்ளத்தாக்கில் உள்ள லஹூலையும் ஆண்டு முழுவதும் இணைத்திருக்கும்.
- இதைக் கட்டி முடிப்பதற்கு 10 ஆண்டுகள் ஆனது, நிர்ணயிக்கப்பட்ட நிதிக்குள் கட்டி முடிக்கப்பட்டது. இத 5 மணி நேர பயண நேரத்தைக் குறைக்கும்.
- இந்த புதிய சுரங்கப் பாதையானது, மனாலி மற்றும் லேயுக்கு இடையேயான பயண நேரத்தை 4 முதல் 5 மணி நேரம் அளவுக்குக் குறைக்கிறது. அத்துடன் தொலைவையும் 46 கிமீ குறைக்கிறது.
- இது மனாலியை ஸ்பிட்டி பள்ளத்தாக்கில் உள்ள லஹூலை இணைக்கிறது.

**2019ஆம் ஆண்டில் இந்தியா உலக அளவில் மிக அதிக காற்று மாசுபாடு வெளிப்பாட்டை பதிவு செய்துள்ளது.**

- 3வது உலகளாவிய காற்று 2020 நிலை அறிக்கை அமெரிக்கா அடிப்படையிலான சுகாதார விளைவுகள் நிறுவனம் மற்றும் சுகாதார அளவீடுகள் மற்றும் மதிப்பீடுகள் நிறுவனத்தின் உலகளாவிய நோய் சுமை (Global Burden of Disease) திட்டத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் 2019ஆம் ஆண்டில் மிக உயர்ந்த வருடாந்திர சராசரி பிஎம் 2.5 செறிவு வெளிப்பாட்டை இந்தியா பதிவு செய்துள்ளது. இதற்கு அடுத்ததாக நேபாளம் 2வது இடத்திலும், நைஜர் 3வது இடத்திலும் உள்ளன.

**ஆசியாவில் அதிக அதிகாரம் மிக்க 4வது நாடாக இந்தியா விளங்குகிறது.**

- சிட்னியை (ஆஸ்திரேலியாவின்) அடிப்படையாகக் கொண்ட லோவி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசியா பவர் இன்டெக்ஸ் நிறுவனத்தின் 2020 பதிப்பில், மொத்தம் உள்ள 100 புள்ளிகளில் 39.7 புள்ளிகளைப் பெற்று இந்தியா ஆசியாவின் அதிக அதிகாரம் மிக்க நாடுகளில் 4வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இந்த அட்டவணையில் 81.6 புள்ளிகளைப் பெற்று அமெரிக்கா முதலிடத்தையும், 76.1 புள்ளிகளைப் பெற்று சீனா இரண்டாவது இடத்தையும், 41.0 புள்ளிகளைப் பெற்று ஜப்பான் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

**‘இந்தியாவில் சாலை விபத்துகள் 2019’ அறிக்கை**

**தேசிய குற்றப்பதிவு பணியகம் - 2019**

- இந்த அறிக்கையின்படி, 2019ஆம் ஆண்டில் இணைவழிக் குற்றங்கள் 63.5 விழுக்காடு அளவுக்கு அதிகரித்துள்ளன.
- 2019ல் பதிவு செய்யப்பட்ட இணையவழிக் குற்றங்களில் மோசடியே முதன்மையான நோக்கமாகக் கண்டறியப்பட்டது. இது 60.4 விழுக்காடு அல்லது 26,891 நேர்வுகள் ஆகும். இதற்கு அடுத்ததாக பாலியல் சுரண்டல் இடம் பிடித்துள்ளது.
- கர்நாடகாவில் மிக அதிகமாக 12,020 இணையவழி குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கு அடுத்த இடங்களை உத்தரப் பிரதேசமும் (11,416), மகாராஷ்டிராவும் (4,967) பிடித்துள்ளன.

- அதே சமயம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை முறையே 7.3 விழுக்காடு மற்றும் 4.5 விழுக்காடு உயர்வைச் சந்தித்துள்ளன.
- குற்ற விகிதம் என்பது ஒரு இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் பதிவு செய்யப்படுகின்றன என்பதைக் குறிக்கும்.

**தேசிய குற்றப் பதிவு பணியகம்**

- ஒன்பது மாநிலங்கள் - 2019ஆம் ஆண்டில் இந்தியாவில் தலித்துகளுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட குற்றங்களில் 84 விழுக்காட்டைக் கொண்டுள்ளன.
- அதிக எண்ணிக்கையிலான குற்ற வீதங்கள் (ஒவ்வொரு ஆயிரம் தலித் மக்கள் தொகைக்கும் எதிரான குற்றங்களின் எண்ணிக்கை) ராஜஸ்தான். மத்தியப் பிரதேசம், பீகார் மற்றும் குஜராத் மாநிலங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- தேசிய சராசரிக்கும் அதிகமான குற்ற வீதங்களைக் கொண்ட இதர மாநிலங்கள் தெலுங்கானா, உத்தரப் பிரதேசம், கேரளா, ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம்.
- இந்தத் தரவுகளின்படி, தாழ்த்தப்பட்டவர்கள் / தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கு எதிரான குற்றங்களில் தண்டனை பெற்றவர்களின் தேசிய வீதம் வெறும் 32 விழுக்காடே ஆகும். நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை அபாய அளவாக 94 விழுக்காடாக உள்ளது.

APOLLO STUDY CENTRE